" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "


மலர் 3 • இதழ் 2

# சிவநெறி
# SIVANERI
## முத்திங்கள் சஞ்சிகை

ஸ்ரீ முக வருஷம் • 1994 தை மாசி பங்குனி

## சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பேருரை நூற்றாண்டு நினைவு இதழ்

அன்பளிப்பு




திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடு

விலை ரூபா 10.00

# நெறிப்பட்ட தியானம்

சுவாமி ஞானானந்தா

எம் ஆன்மாவிற்கெல்லாம் வழிகாட்டியான,
உண்மையும் தெய்வீகமும் பொருந்திய
குருவை தியானிப்போம்.
அவரே; பிரம்மமாகிய பேரின்பத்தை தன்னுள் கொண்டு
பேரானந்தத்தை வழங்குபவர்
அவரே; என்றும் புனிதம் வாய்ந்தவராய்
பேரறிவின் உருவாய் உள்ளவர்
அவரே; வெப்பம் குளிர், இன்பதுன்பம், இறப்பு,
பிறப்பு எனும் நிலைகளில் உள்ளவர்
அம் மேன்மையான குருவை தியானிப்போம்.
அவரே; தூய்மையானவராயும்
களங்கமற்ற வானத்தையும் போன்றவர்
அவரே; நிலையானவராயும்
அதுவே நீ ஆகிறாய் ''என''
வேதங்களாலும் காட்டப்படுகிறார்
அவரே; மனத்தின் பக்குவங்களிற் கெல்லாம்
சாட்சியுமாகிறார்
அவரே எம் நினைவிலும் செயலிலும் கலந்திருப்பவர்
அம் மேன்மையான குருவை தியானிப்போம்.

★

ஓ ... இறைவா ......! நீயே......
நாம் நினைக்கும் ஒருவன்
நாம் வழிபடும் ஒருவன்
நாம் கடவுளாக அங்கிகரித்த
பிரபஞ்சத்திற் கெல்லாம் சாட்சியான ஒருவன்
நாம் அடைக்கலம் பெற்றுள்ள ஒருவன்
எம் ஆன்மாவிற் கெல்லாம் பாதுகாப்பான ஒருவன்
வாழ்க்கை எனும் கடலில் தத்தழிக்கும்
எமையெல்லாம் அமைதியெனும் கரைசேர்க்கும் தோணி
ஓ இறைவா......!
நீயே முடிவற்ற வலிமையின் இருப்பிடம்
எமக்கு வலிமையைத் தந்தருள்வாய்
நீயே முடிவற்ற உண்மை
எமக்கு உண்மையை உணர்த்துவாய்
நீயே முடிவற்ற வீரியத்தின் இருப்பிடம்
எமக்கு வீரியத்தை வழங்குவாய்
நீயே முடிவற்ற சக்தியின் உறைவிடம்
எமக்கு சக்தியை அளித்தருள்வாய்
நீயே முடிவற்ற துணிச்சலின் இருப்பிடம்
எமக்கு துணிச்சலை ஏற்படுத்துவாய்
நீயே முடிவற்ற மன உறுதியின் உறைவிடம்
எமக்கு மன உறுதியை வழங்குவாய்

★

பாவங்களிலிருந்தும் பந்தங்களிலிருந்தும்
நாமெல்லாம் விடுபடுவோமாக
ஒளிவடிவான தெய்வீகத்தை உணர்வோமாக
எமது தேகம் தூய்மையடையட்டும்
எமது மனம் தூய்மையடையட்டும்
எமது ஆன்மா தூய்மையடையட்டும்
ஒளிவடிவான தெய்வீகத்தை
நாமெல்லாம் உணர்வோமாக

★

ஓ .. இறைவா......!
நிலையற்றதிலிருந்து நிலையானதிற்கு
எம்மை வழிநடத்தும்
இருளில் இருந்து ஒளிக்கு
எம்மை வழிநடத்தும்
இறப்பிலிருந்து பிறவாமைக்கு
எம்மை வழி நடத்தும்

★


நாம் அபாயங்களிலிருந்து விடுபடுவோமாக
நாம் நல்லது எதுவென உணர்வோமாக
நாம் உயர் எண்ண அலைகளால் தூண்டப்படுவோமாக
நாம் எங்கும் சந்தோஷம் காண்போமாக
நாம் என்றும் இன்பம் அடைவோமாக
நாம் நோய்களினின்று விடுபடுவோமாக
நாம் ஒருவரும் துன்பமடையாதிருப்போமாக
நாம் நல்லது எதுவென உணர்வோமாக

★

தீயவை எல்லாம் நன்மையாகும்
நன்மைகள் யாவும் அமைதிபெறட்டும்
அமைதியடைந்தவை பற்றினின்று விடுபடட்டும்
வீடெய்தியவை ஏனையவற்றையும் விடுவிக்கட்டும்
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி:

தொகுப்பு:- ச.ரா

உ
சிவமயம்




## விநாயகர் துதி

ஞாலமெல்லாம் உன்புகழை நாட்டக் கவிபுனைந்தேன்
காலமெல்லாம் உன்னைக் கருதிடுவேன் - வேலவனின்
அண்ணாவுள் ளன்பர்களை ஆதரிக்கும் மெய்ஞானக்
கண்ணா எனைக் கடைக்கண் பார்.



உ
சிவமயம்



## நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்.
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்.

# எண்ணம்

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிப் படியில் முக்கியமான பங்கை இளைஞர் சமுதாயமே பெறுகின்றது. இளைஞர் சமுதாயத்தின் எழுச்சியே ஒரு சமுதாயத்தின் எழுச்சி, ஒரு கலாசார பாரம்பரியத்தின் எழுச்சி என்பதை உலகையே தமது பேரறிவாற்றலால் விழிப்படையச் செய்த சுவாமி விவேகானந்தர் அவர்கள் போதித்து வந்தார். சாதனையிலும் இளைஞர் சமுதாயத்தின் உயர்ச்சிக்காகவே பாடுபட்டார்

ஊரூராகச் சென்று இளைஞர்களின் ஆற்றலையும் வலிமையையும் வெளிக் கொணரப் பாடுபட்டார். மூத்தோர் சமுதாயத்திடம் இளைஞர்களுக்கு மதிப்பளிக்கும்படியும் அவர்களின் சேவையைச் சமுதாய உயர்வுக்காகப் பெறும்படியும் வேண்டி நின்றார். குறிப்பாக இந்து சமயத்தின் உயர்ச்சி இளைஞர்களின் உயர்சக்தியிலேயே தங்கி உள்ளது என்பதை இந்துக்கள் மத்தியில் எடுத்துரைத்தார். இந்துக்கலாசாரத்தைக் கடைப்பிடித்து வாழப் பழக வேண்டுமேயன்றி மதப் பெரியார்களாக மாற்றக் கூடாது என்னும் உயரிய சிந்தனையை இந்துக்கள் மத்தியில் விதைத்தார். ''எழுமின், விழிமின் இலட்சியத்தை அடையுமட்டும் உரைமின்'' என்னும் உயரியபோதனையால் துடிப்பு மிக்க இளைஞர் சமுதாயத்தை உருவாக்க சுவாமிகள் தமது வாழ்நாள் முழுவதுமே உழைத்தார். அறியாமையற்ற அறிவொளி மிக்க ஒரு ஆன்மீக சமுதாயத்தை மிகவும் விரும்பினார்.

உலக வரலாற்றின் ஒரு ஒப்பற்ற மாற்றத்தை சுவாமிகளின் சிக்காகோப் பேருரை ஏற்படுத்தியது சமரச சண்மார்க்கம் என்னும் எண்ணம் அகில உலகமெங்கும் பரவத் தொடங்கியது. அதன் தாக்கம் எமது தாய் நாடாகிய ஈழத்திலும் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியது எல்லாவகையிலும் எமது சமுதாயத்தைப் பீடித்திருந்த உயர்வு தாழ்வு என்னும் மனப்பாங்கு வேரற அன்னாரின் கருத்துரைகள் தாரக மந்திரங்களாக அமைந்தன.

இக்கால கட்டத்திலேயே ஈழத்திலும் இந்து இளைஞர்கள் மத்தியில் தங்கள் கலாச்சாரப் பாரம்பரியத்தின் மீது பெரும் பற்று ஏற்படத் தொடங்கியது. இதனை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்களே இந்து இளைஞர் மன்றங்கள் இலங்கை இந்து இளைஞர் பேரவை என்னும் அமைப்பு ஈழத்தின் தலைநகர் கொழும்பில் ஏற்படுத்தப்பட்டு இந்து இளைஞர்களின் உயர்வுக்காகப் பாடுபட்டு வந்தது. ஒவ்வொரு மாகாணங்கள் தோறும் மாவட்டங்கள் தோறும் கிராமங்கள் தோறும் இந்து இளைஞர் அமைப்புக்கள் உருவாகின, திருக்கோணமலை மாவட்டத்தில் ஊர்கள் தோறும் இந்து இளைஞர் மன்றங்கள் உருவாக்கப்பட்டன அவ்வமைப்புக்களின் கூட்டமைப்பாகத் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை உதயமானது, மன்றங்களையும் வளர்த்துத் தன்னையும் வளர்த்துக் கொண்ட ஒரு உயர் அமைப்பாகத் திருக்கோணமலையில் இயங்குவதுடன் இந்து சமயக் கலாச்சார விழுமியங்கள் வாழ தன்னாலான வரையில் உழைத்து வருகின்றது. உலக உத்தமர் சுவாமி விவேகானந்தர் அவர்களின் அறைகூவலை ஏற்றுக்கொண்ட இந்து இளைஞர்களின் அமைப்புக்களே இந்து இளைஞர் மன்றங்களும் இந்து இளைஞர் பேரவையும் ஆகும். சுவாமிகளின் உயரிய சிந்தனையாம் ''இந்து இளைஞர்களின் உயர்வு'' என்னும் உயர்வுக்காய் இந்து இளைஞர்களே ''எழுமின் விழிமின், இலட்சியத்தை அடையுமட்டும் உறைமின் எனக் கேட்கின்றோம். இதுவே எமது மேலான எண்ணமாகும்.

இப்பெரும் எண்ணத்தினாலேயே சுவாமிகளின் சிக்காகே உரையின் நூற்றாண்டு நினைவின் மலராக எமது பேரவையின் சிவநெறிச் சஞ்சிகையின் இம்மலரை வெளியிடுகின்றோம். சுவாமிகளின் நற்பெருங் கருத்துக்கள் எமது சமுதாயத்தின் மத்தியிலும் குறிப்பாக இளைஞர் சமுதாயத்தின் மத்தியிலும் ஆழப்பதிய அயராது உழைப்போம் இதற்கான 'வலிமையைத் தரவேண்டி திருக்கோணேசப் பெருமானின் திருத்தாள் வணங்குவோம்.

# வாழ்க்கை ஓர் ஓய்வு விடுதி

- ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் -

உலக வாழ்க்கை என்பது மனிதன் சிறிது காலம் தங்கி இளைப்பாறிச் செல்ல வாய்ப்பளிக்கும் ஒரு சத்திரம் அல்லது தங்கும் விடுதி என்ற அளவுக்கு உலகவாழ்க்கையின் மீது பற்று, பிடிப்பு ஏற்படக்கூடாது என்பதுதான் இந்து சமய சாத்திரங்களும், அறிஞர்களும் உபதேசிக்கின்ற உண்மை ஆகும்.

உலக வாழ்க்கை ஏதோ நிரந்தரமான அழிவற்ற ஒன்று என்ற எண்ணம் மனத்திலே நிலைக்கும் போது தான் மனிதன் பிரச்சினைக்கு உரியவனாகிறான்.

வாழ்க்கையில் நிரந்தரமான சுகபோக வாழ்வினை அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பஞ்சமா பாதங்களையும் துணிந்து செய்ய முனைகின்றான்.

முறைகேடான வழியில் பொன்னையும் பொருளையும் சேர்த்துக் குவிக்க பேயாய் அலைகின்றான்.

அடுத்தவர்களைக் கெடுத்து அழித்து நிலைகுலையச் செய்து அவர்கள் உழைப்பின் பயனைச் சுரண்டிக் கொழுக்க முற்படுகின்றான்.

பிறரை அடக்கி ஒடுக்கி அவர்களது தலைவனாக எஜமானாக ஆகி தனக்கென ஓர் அந்தஸ்தினை தோற்றுவித்துக் கொள்ள முனைகின்றான்.

திடீரென ஒருநாள் மனிதன் மரணத்தின் குறுக்கீடு காரணமாக தன் வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் போது இத்தனை நாட்கள் அவன் செய்யத் தகாதவற்றையெல்லாம் செய்து, படாத பாடு பட்டு சாதித்த சாதனை எதுவுமே அவனுக்குத் துணை நிற்பதில்லை. மரணத்திற்குப் பிறகு அவனுடன் சேர்ந்து வரவில்லை என்பதை உணர்ந்து கொள்கின்றான்.

ஆனால் அந்த உணர்வினை மனிதன் பெறும் போது காலம் கடந்து விடுகின்றது. அதனால் அந்த உணர்வின் பயனை அவனால் அடைய முடிவதில்லை.

மனித வாழ்க்கையின்போது நமக்கு ஏற்படுகின்ற உணர்ச்சி பேதங்களினாலும் நமக்கு ஒருவித பயனும் இல்லை. என்பதும் நமக்கு விளங்குவதில்லை.

சாதாரணமாக நாம் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிகளைச் சந்திக்கும் போது நமது மனம் மட்டற்ற மகிழ்சியினால் துள்ளித் தாண்டவமாடுகின்றது. ஆனால் தோல்விகளை நாம் சந்திக்க நேர்ந்தால் நமது மனம் நிலைகுலைந்து தத்தளித்துச் சோர்வடைந்து ஒடுங்கி விடுகின்றது.

வாழ்க்கை என்பது ஏதோ நின்று நிலைக்கும் நிரந்தரம் என்ற எண்ணம் நமது மனதிலே உறுதியிட்டு நிற்பதனால்தான் நாம் இவ்வாறு உணர்ச்சி வசப்படுகின்றோம்.

வாழ்க்கை நிகழ்ச்சிகள் தொடர்பாக நாம் அதிகமாக மகிழ்ச்சிக்கு இலக்காவதனாலோ பெருந்துயருக்கு உள்ளாவதனாலோ எந்தவித உருப்படியான பயனும் உற்படுவதில்லை.

அது தேவையற்ற கனல் உணர்வினைத் தான் தொடர்ந்து வாழ்க்கையில் ஏற்படுகின்றன.

எதிர்பாராத ஒருவாய்ப்பு நமக்குக் கிடைக்கும் போது நாம் பெருமளவுக்கு குதூகலம் அடைகின்றோம். ஆனால் அந்தக் குதூகலம் நிலைப்பதில்லை, நமக்கு கிடைத்த நல்ல வாய்ப்பு கைதவறி விடும் போது நமது மனம் விசனத்தில் வேதனையில் ஆழ்ந்து விடுகின்றது.

மீண்டும் நமக்கு நல்ல வாய்ப்பு ஏதாவது கிடைத்தால் மறுபடியும் மனம் மகிழ்ச்சியில் ஆழ்கின்றது. ஆகவே வாழ்க்கையில் ஏற்படக்கூடியது மகிழ்ச்சியும் துயரமும் நிரந்தரமானதாக இல்லை. இந்த நிலையில் இத்தகு உண்ர்ச்சிகளுக்கு வாழ்க்கையில் ஏன் அதிக முக்கியத்துவம் தரவேண்டும்.

ஆகவே வாழ்க்கையில் மனத்தை - மனம் தொடர்புடைய உணர்வுகளை ஒரே சமநிலையில் வைத்திருக்க வேண்டும். இதனை சங்கராச்சாரிய சுவாமிகள் பஜ கோவிந்தப் பாடல் மூலம் உபதேசிக்கிறார்.

''தாமரை இலைமீது தத்தளிக்கும் நீர்த்துளியினைக் கண்டிருப்பீர்கள்: அது மிகவும் நிலையற்ற ஒரு வாழ்வினை வாழ்கின்றது''

''இந்த தாமரை இதழ்த் தண்ணீர்துளி போன்றது தான் வாழ்க்கை அதாவது நிலையற்ற ஒன்றாக உள்ளது''

''இந்த உலகமானது - அல்லது உல்க வாழ்க்கையானது நோயினாலும், சுகபோக உணர்வினாலும் அபிமானத்தாலும் துவேஷத்தாலும் விழுங்கப்படுகின்றது''

இந்த உண்மையினைத் தெளிவாக விளங்கிக் கொள்கிறார்.

மழைக்காலம் வந்து விட்டது என்றோ, கோடைக் காலம் தொடங்கி விட்டது என்றோ, யாராவது

# Swami Vivekananda's Message to the World

— Swami Athmahananda —
( Ramakrishna Mission, Sri Lanka )



SWAMI VIVEKANANDA

This is the Centenary year of the historical and unique 'World Parliament of Religions', held in Chicago in 1893, a first of its kind in human history This event is more relevant and important to us because, it was instrumental in bringing Swami Vivekananda to the West to spread broadcast the universal and immortal truths of Hinduism Till then, the West had no clear or correct knowledge of Hinduism, but thought of it as primitive and even barbaricl But after hearing Swami Vivekananda, they had to change their wrong view, and they developd tremendous admiration for Hinduism, since they found this religion to be based, not merely on faith, but on reasoning and experience too.

Yet another significance of this event is that it offered the world a golden opportunity to hear from the mouth of Swamiji, the immortal message of the ancient india, the message of the harmony of religions, which the world needed urgently. 'Truth is one; sages call it by various names' is the famous statement of the ancient Rig-veda, a statement which is the outcome of Rishi's personal experience of the oneness of the various godheads Because of the lack of proper understanding of this knowledge of religious harmony, people all over the world have been fighting against each other, claiming superiority to the religion they belong to. Commenting on this destructive and debasing nature of religious bigotry, Swamy Vivekananda says in his Chicago speech, "Sectarianism, bigotry and its horrible descendant, fanatism, have long possessed this beautiful earth They have filled this earth with violence. drenched it often and often with human blood, destroyed civilizations, and sent whole nations



SWAMI ATHMAHANANDA

மகிழ்ச்சியோ, துயரமோ படுவார்களா? மகிழ்ச்சியோ துயரமோ படுவதனால் பருவகாலங்கள் தோன்றுவதைத் தடுக்க முடியாது. அல்லது பருவகாலங்களின் கடுமையைக் குறைத்துவிட முடியாது.

நிலையற்ற கொஞ்சகாலம் இந்த உலகத்தில் வாழ்ந்து விட்டுச் செல்கின்ற நமக்கு இந்தமாதிரி மனஉளைச்சல் தேவையே அற்ற ஒன்றாகும்.

பரம்பொருளை உணர்ந்து கொள்வதும் இறுதியாக பரம்பொருளை சரணடைவதும் தான் வாழ்க்கையின் அடிப்படையான நோக்கம் என உணர்ந்து அதற்கான பயிற்சியில் மனத்தை தீவிரமாக ஈடுபடுத்த வேண்டும்;

to despair. Had it not been for these horrible demons, human society would be far more advanced than it is now "

From the world platform of the 'World Parliament of Religions', Swami Vivekananda made a fervent appeal to the world, to understand the inner spirit to be the same in every religion, and hence give up religious fanaticism.

Every religion has two aspects in it, one the ritual part, and the other the goal. The paths, i.e the rituals and other external details of worship, vary from religion to religion. But the end of all these religious struggles, is to become gods ourselves. By becoming god is meant, to manifest, in one's life, godly qualities of love, unselfishness, truthfulness, fearlessness, prity etc

When the goal reacheb by all these different paths or methods of worship is the same, what does it matter whether one follows this or that or any path It is a day-light truth of history that every religion has produced men of noble qualities. So what is the use of religious fanaticism? It is utter uselese and non-sense too. Says Swami Vivekananda in his Chicago Speech, "If the parliament of Religions has shown anything to the world it is this It has proved to the world that holiness, purity and charity are not the exclusive possessions of any church in the world, and that every system has produced men and women of the most exalted character. In the face of this evidence, if anybody dreams of the exclusive survival of his own religion and the destruction of others I pity him from the bottom of my heart "

Religion is not a matter for discussion or quarrel. It is to be lived and experienced. It is that which cements together sickly hearts, sick due to difference of opinion A man who is hungry would not be satisfied until getting a square meal. No amount of discussion about food will satisfy him in the least Similar is the case in religion too. A man desiring to know god, will not feel satisfied with mere discussions and arguements, until he is face fo face with god. Books are necessary; temples are necessary, rituals and festivals are necessary, and any type of religious pursuit may be adopted They all really help men But they cann't make everything of religion They only form the outer fringe of religion. Religion is realization, as Swami Vivekananda says. "Realisation of religion is the only way. Each one of us will have to discover. Of what use are those books? They are of great use just as the maps are of a country. I have seen maps of England all my life, yet what a difference between the maps and the country itself! So is the difference between realisation and the scriptures. These books are only the maps, the experience of past men, as a motive power to us to dare to make the same experiences and discover in the some way, if not better"

So, religion shold be understood the practised with an effort to reach the core of it, which is called differently as God, Truth, Dharma etc Indifferent religions. There is a well known statement of Swamiji on the definition of religion "Each soul is potentially divine, the goal is to manifest this divinity in life. Do this by work, or worship, or psychic control or philosophy: by one or more or all of them, and be free. This is the whole or religion."

The world has seen enough of wars due to religious strife, and it is high time that peopie pay more attention to the man-making aspect or religion, by outgrowing the ritualistic stages of religion and that is the only way to bring more peace in this world this is the age of science, and every aspect of life is approached and developed with a scientific spirit, with a probing mind And it should be so in the case of religion also. There should not be any room for superstition or bigotry in religion Religion is as scientific as any other knowledge of life. So let us profit more by following religion in its pure and higher aspect of values. This is the massage of Swami Vivekananda to us all "My idea therefore, is that all these religions are different forces in the economy of God, working for the good of mankind, and that none one can become dead," Let us learn to give respect to other religious faiths; learn to accept whatever is good in others Instead of becoming more religious, it is better to become more humane. Of course, to become religious means, in the correct sense, to become humane. this is the man-making philosophy of Swami Vivekananda.

# இளைஞர் சமுதாயத்துக்கு சுவாமி விவேகானந்தர் காட்டும் வழி

சுவாமி அஜராத்மானந்தாஜி
(இராமகிருஷ்ண சங்கம் மட்டக்களப்பு)

இளைஞர்களின் ஆற்றலை முழுமையாக ஆக்கபூர்வமான பணிகளுக்கு பயன்படுத்த வழிகாட்டியவர் சுவாமி விவேகானந்தர். அனுபவ முதிர்ச்சி இல்லாதவர்களென்று முதியவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட இளைஞர் சமுதாயத்திற்கு முக்கியத்துவம் முதலிடம் கொடுத்தார். நாட்டை சீரமைக்கும் பணியில் இளைஞர்களின் பங்கு மிக முக்கியமானது என்பதை வலியுறுத்தினார். மனவலிவும், உடல் உரமும் இளைஞர்களால் தான் உயர்ந்த சிந்தனைகளையும், கருத்துக்களையும் சகித்துக் கொள்ள முடியும் என்றும் புகழ்மிக்க புதிய சமுதாயத்தைப் படைக்க தியாக மனப்பான்மையும் தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர் படையொன்றின் அவசியத்தை உணர்ந்தார். பலமற்ற மூளையால் எதையும் செய்ய முடிவதில்லை. அதைப் பலப்படுத்த வேண்டும் என்றார் முதலில் நம் இளைஞர்கள் உடலாலும் உள்ளத்தாலும் பலமுடையவர்களாக வேண்டும். மத உணர்ச்சி அதற்குப் பிறகு வரும் எனச் சொன்னார். எனது வாலிப நண்பர்களே! பலமுடையவர்களாகுங்கள். அதுதான் நான் உங்களுக்கு அளிக்கக்கூடிய புத்திமதி. நீங்கள் கீதையைப் படிப்பதைவிட கால்பந்தாடுவதன் மூலம் சுவர்க்கத்திற்கு அருகில் செல்வீர்கள். இவை தைரியமான வார்த்தைகள். உங்களுக்கு இவைகளைச் சொல்ல வேண்டியிருக்கின்றது. ஏனெனில் நான் உங்களை நேசிக்கிறேன். செருப்பு எங்கு கடிக்கிறதென்று எனக்குத் தெரியும். எனக்குக் கொஞ்சம் அனுபவம் இருக்கிறது. உங்கள் கை, கால், தசைகளில் இன்னும் கொஞ்சம் பலம் வந்தால் கீதையை நன்றாக அர்த்தம் செய்து கொள்வீர்கள். உங்கள் இரத்தத்தில் வேகம் இருந்தால் ஸ்ரீ கிருஷ்ணருடைய அளவற்ற பராக்கிரமத்தை நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். உங்கள் உடம்பு உங்கள் கால்களின் மேல் நிமிர்ந்து நிற்க நீங்கள் ஆண் பிள்ளைகள் என்ற உணர்ச்சி உங்களுக்கும் தோற்றும் போது தான், நீங்கள் ஆத்மாவின் மகத்துவத்தையும், உபநிடதங்களின் தத்துவத்தையும் நன்றாக அறிந்து கொள்ள முடியும்.

நாம் இதுவரை அழுதது போதும், இன்னும் ஏழைமனதுடையவர்களாக ஆவதுற்கு இது காலமல்ல, கண்ணீர் விட்டு இரங்கி நாம் பஞ்சு மூட்டைகளைப் போல் மிருதுவாகி செத்தவர்கள் போலாகி விட்டோம். நமது தேகம் இப்பொழுது வேண்டுவது இரும்பு போன்ற தசைகளும், உருக்குப் போன்ற நரம்புகளுமே. எல்லையற்ற சக்தி வாய்ந்த எவரும் தடுக்க முடியாத இந்த அண்டத்தின் இரகசியங்களை ஊடுருவி தெரிய வல்லதும் அதற்காக அவசியமானால் சமுத்திரத்திற்கடியிலும் சென்று சாலையும் எதிர்க்கக் கூடியதுமான மனோதிடம் தான் நமக்கு இப்பொழுது தேவை. இதுதான் நமக்கு வேண்டும். இதையுண்டாக்கி நிலை நிறுத்தத் துணை செய்வது ஏகத்துவமென்ற அத்வைத லட்சியத்தை நன்றாக உணர்ந்து அதை அனுபவத்தில் கொண்டு வருவதுதான் நம்பிக்கை, நம்மிடம் நம்பிக்கை கடவுளிடம் நம்பிக்கை இதுதான் உயர்ந்த வாழ்வின் ரகசியம். உங்கள் முப்பத்துமூன்று கோடி தெய்வங்களிலும் உங்களுக்கு நம்பிக்கை இருந்து உங்களிடம் உங்களுக்கு நம்பிக்கை இல்லையானால் உங்களுக்கு கதிமோட்சம் இல்லை, தன்னம்பிக்கை கொண்டு பலம்பெற்று எழுந்து நில்லுங்கள்.

---

This centenary celebration of Swami Vivekananda's Chicago Speech has enabled thinking men to under deeply on these life giving ideas of religion as expounded by Swamiji The more people realise the important of this message of him, the better for the world.

On the concluding day of the 'World Parliment of Religions' Swami Vivekananda made the following statement, a prophetic and thought provoking message to all, for a peaceful co-existence, the only and sure way to find lasting peace in this world : " Do I wish that the Christian would become Christian? God forbid. The seed is put in the ground, and earth and air and water are placed around it Does the seed become the earth, or the air, or the water? No, it becomes a plant; it develops after the low of its own growth; assimilate the air, the earth, and the water, converts them into plant substance, and grows into a plant. Similar is the case with religion. The Christian is not to become a Hindu or a Buddhist, nor a Hindu or a Buddhist to become a Christian. But each must assimilate the spirit of the others and yet preserve his individuality and grow accordind to his own law of growth''.

நாம் முப்பத்து முக்கோடி மக்களாக இருந்திருக்கின்றோம். எனினும் ஏன் இந்தியாவின் மேல் படையெடுத்த அன்னியர்கள் அனைவரும் அவர்கள் மிகக் குறைந்த பேராக இருந்த போதிலும் நம்மை வெற்றி கொண்டு ஆண்டு வந்திருக்கின்றனர்' அதற்குக் காரணம் அவர்களிடம் தன்னம்பிக்கை இருந்தது. நம்மிடம் அது இருக்கவில்லை.

விவேகானந்தர் மடாலயங்களிலும் தவச்சாலைகளிலும் அடங்கியிருந்த வேதாந்த கருத்துக்களுக்கு நவீனகாலத்திற்கு ஏற்ற வகையில் விஞ்ஞான ரீதியான விளக்கம் கொடுத்தார். நடைமுறைக்கேற்ற வாழும் வழியாக மாற்றி அமைத்தார். அதை அவர் நடைமுறை வேதாந்தம் எனக் குறிப்பிட்டார். இல்லறம், துறவறம், இருபிரிவினருக்கும் வேதாந்தத்தைப் பொது உடைமையாக்கினார். ''ஒவ்வொரு மனிதனையும் கடவுளாகவே கருதி சேவை செய், இதுதான் மனிதன் தனக்கும் பிறருக்கும் நன்மை அளிக்கக்கூடிய பெரும் சாதனையாகும். மக்கள் சேவையே ஆத்ம விடுதலைக்கு பாதையாக அமைய வேண்டும் என்று அவர் சொன்னார். பிறருக்கு உதவுகிறோம் என்று நாம் எண்ணும்போது நம்மை உயர்ந்தவர்களாகவும் உதவி பெறுபவர்களையும் தாழ்ந்தவர்களாகவும் கருதுகின்றோம் ஆனால் மனிதனுள் இறைவன் இருக்கிறான் என்ற உணர்வோடு நாம் செய்யும் உதவியை சேவையாக தொண்டாகச் செய்யும் போது உயர்வு தாழ்வு மனப்பான்மைக்கே இடமில்லை. பெரும் ஆத்ம சாதனை மூலம் கிடைக்கும் பலனை சேவையின் மூலம் பெறலாம். இந்த வேதாந்தக் கருத்தை விவேகானந்தர் பின்வருமாரு விளக்கினார்.

''நான் இதுவரை செய்த உதவிக்காக எந்தப் பிச்சைக்காரனும் நம்மிடம் ஒரு சல்லிக்காசுக்கும் கடமைப்பட்டவன் அல்ல. நாம் தான் அவனிடம் நன்றி உடையவனாக இருக்க வேண்டும். ஏன் என்றால் உலகிற்கு நன்மை செய்ததாகவும் செய்ய முடியும் என்றும் மக்களுக்கு உதவி செய்தோம் என்றும் நினைப்பது முற்றிலும் தவறானதாகும். எனவே உலகிற்கு நன்மை செய்வதாக நினைக்கும் முட்டாள்தனமான நினைப்பை நாம் விட்டுவிடுவோம். உலகம் நம் உதவிக்காகக் காத்துக்கொண்டு இருக்கவில்லை. என்றாலும் நாம் எப்போதும் நன்மை செய்து கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால் இப்படிச் செய்வதுதான் நமக்கு நாமே பெரிய நன்மையை செய்து கொள்கின்றோம். நாம் மனத் தூய்மை பெற ஒரேவழி நன்மை செய்வதேயாகும்.

நல்லதை செய்ய வேண்டும் என்றும் ஆர்வம் நாம் பெற்றிருக்கின்ற மிகச் சிறந்த ஆற்றலாகும். ஒவ்வொரு வினாடியும் நன்மை செய்வதே என்பது நம் வாழ்வில் நமக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வாய்ப்பாகும். அதற்காக ஐந்து காசுகளை கையில் எடுத்துக்கொண்டு உயரமான மேடையில் நின்று ''ஏ'' பிச்சைக்காரரே இதோ உங்களுக்கு நான் உதவி செய்கின்றேன். என்று கூறி பெருமையடித்துக்கொள்ளாமல் அவாகள் இருப்பதால் தான் உங்களால் உதவி செய்ய முடிந்தது. என்று நினைத்து அப்படிச் செய்வதால் உங்களுக்கு நீங்களே உதவி செய்து கொள்கிறீர்கள், என்பதையும் உணர்ந்து அவர்களுக்கு நன்றி கூறுங்கள்.

பெற்றுக் கொள்பவன் அல்ல கொடுப்பவனே பேறு பெற்றவன். பிறருக்கு உதவி செய்வதன் மூலம் இந்த உலகத்தில் நீங்கள் உங்களுடைய நல்லது செய்யும் ஆற்றலையும் கருணையையும் காட்ட அனுமதிக்கப்பட்டதாகவும் அதன் மூலம் தூய்மையையும் முழுமையையும் அடைவதற்காகவும் உலகத்திற்கு நீங்கள் நன்றி உடையவர்களாக இருங்கள். எல்லா நற்செயல்களுமே நம்மைத் தூய்மையானவர்களாகவும் முழுமையானவர்களாகவும் மாற்றுகின்றன.

வேற்றுமையில் ஒற்றுமை என்பதுதான் படைப்பின் திட்டம். ஒவ்வொரு ஆணும், பெண்ணும் எவ்வளவுக்கு எவ்வளவு ஒருவரிடமிருந்து ஒருவர் வேறுபட்டிருந்தாலும் அடிப்படையில் ஓர் ஒற்றுமை காணப்படுகின்றது. மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் சில குணங்கள் அமைவதும் படைப்பில் இயல்பாக அமைகின்ற வேற்றுமையாகும். எனவே நாம் எல்லோரையும் ஒரே அளவு கோலை வைத்து அளக்கக் கூடாது. உலகத்திலுள்ள எந்த ஆணும் பெண்ணும் ஒரேமாதிரியான மனமும், திறமையும் செயல் புரியும் சக்தியும் பெற்றவர்களாக இல்லை. அவர்கள் ஒவ்வொரு விதமான இலட்சியங்களை கொண்டவர்களாகவே நிச்சயம் இருப்பார்கள். அவர்களைக் குறைகூறுவதற்கு நமக்கு உரிமை கிடையாது. ஒவ்வொருவரும் தம்முடைய லட்சியம் நிறைவேறுவதற்கு முடிந்தவரை சிறப்பாக முயற்சிக்க வேண்டும். உன் இலட்சியத்தை வைத்துக்கொண்டு நீ என்னை எடை போடுவதும் என் லட்சியத்தை வைத்துக்கொண்டு நான் உன்னை எடைபோடுவதும் சரியானதல்ல. ஒவ்வொரு மனிதனையும் அவர்களுடைய தகுதிக்கு ஏற்ப மதிப்பிட வேண்டும். தத்தம் நிலையில் தாம் பெரியவரே.

தனியுரிமை பற்றிய புரட்சிகரமான கருத்துக்களை சுவாமிஜீ பின்வருமாறு கூறுகிறார். ''மனித சமுதாயம் இயல்பாகவே பல பிரிவுகளாக பிரிந்துள்ளது. ஆனால் அவற்றில் ஏதாவது ஒரு பிரிவினர் அல்லது ஜாதியினருக்குத் தனியுரிமை இருந்தால் அத்தனியுரிமை தொலைய வேண்டும். சமுகம் இயல்பாகவே பல பிரிவுகளாக மாறி இருக்கின்றது. சமுகத்தில் நான் ஒரு தொழில் செய்யலாம். நீங்கள் வேறொன்று செய்யலாம். நீங்கள் அரசனாகலாம்.

# சமய தத்துவக் கருத்தும் விவேகானந்தரும்

— ஸ்ரீரஜனிதேவி நடராஜ் (ஆண்டு 11-A தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி) —

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பேருரையின் நூற்றாண்டு விழாவையொட்டி தி. மா. இ. இளைஞர் பேரவையால் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கட்டுரை.

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் ஆண்மையே வடிவெடுத்து வந்தவர். வீரமும் தீரமும் அவர்பால் எத்துறையிலும் திகழ்ந்திருந்தன. சீலம் பல ஒருங்கே வாய்க்கப் பெற்றவர் அவர். இந்து மதத்துக்கு உலகெங்கும் தலைமை ஸ்தானம் ஏற்படுத்தி வைத்த பரமாச்சாரியார் அவர். ஆனால் பிறமதம் என்பது எதுவும் அவருக்கில்லை. மதக் கொள்கைகள் அனைத்தும் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது வாழ்வின் வாயிலாகச் சமரசப்படுத்தியுள்ளார். அந்தச் சமரசத்தை மாந்தருக்கு எடுத்து வழங்கியவர் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள்.

ஒவ்வொருவனும் தனக்கு இயன்றதும் பொருந்தியதுமாகிய மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் மதவெறி என்னும் நோய்க்கு யாரும் உள்ளத்தில் இடங் கொடுக்கலாகாது. அது அன்பு பெருகுவதைத் தவிர்த்து மாந்தர்பால் பிணக்கையும் பொறாமையையும் விளைத்து விடும். ஆதலால் வெறி நோயை விலக்கி ஓட்டுவதற்காக தத்தம் மதமே திறமென்று ஸ்தாபிக்க முயல்பவர்களுக்கு அந்தந்த மதத்தின் கண் உள்ள குற்றத்தையும் அவர் தெற்றென விளக்கிக் காட்டுவார். ஒவ்வொரு மார்க்கத்திலும் உள்ள குணம் குற்றம் நன்கு தெரிந்திருந்தால் தான் மதவெறி அகலும் என்பது சுவாமிகளது கருத்து. வேறுபடும் சமயங்கள் வாயிலாக விளங்குவது ஒரே பரம்பொருள் என்பதைச் சாதகன் ஒருவன் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு அதை அவன் அநுபூதி வாயிலாக அறிய வேண்டும் என்பதே அவரது சித்தாந்தம். ரோஜா மலரை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அதேநறுமணம் தான் கமழும். யாதொரு தெய்வங் கொண்டாலும் அத்தெய்வமாகி அங்கே மாதொரு பாகனார் தான் வருவார் உருவவழிபாடுடையவர்கள் ஒழுக்கத்திலும், பக்தியிலும் ஆன்மீகத்திலும் ஈடு இணையற்றவர்களாய் இருப்பதை நாம் காண்கின்றோம்,

நல்லனபாவையும் வணங்குவது நன்றே. ஏனென்றால் நலமிக்கது ஒன்றே வணங்குவது மாந்தரது சுபாவம அவ்வாறே அச்சம் விளைவிப்பவைகளையும் அவர்கள் வணங்க வேண்டும். துன்பம் விளைவிப்பவைகளையும் வணங்க வேண்டும். அச்சத்தையும் துன்பத்தையும் தவிர்க்க முயலுபவன் ஒருவன் அவைகளால் வெல்லப்படுகின்றான். அவ்வளவுக்கு அவ்வளவு அவைகள் அவனைத் தொடர்ந்து பற்றி உடற்றி வாட்டுகின்றன எங்கே சென்றாலும் அவைகள் அவனை விடுவதில்லை. வாழ்வில் அவைகள்

நான் செருப்புத்தைக்கலாம். ஆனால் அதன் காரணமாக நீங்கள் உயர்ந்தவர்கள் என்று நீங்கள் சொல்ல முடியாது. என்னால் ஆழ முடியாமல் இருக்கலாம், ஆனால் உங்களால் செருப்புதைக்க முடியுமா? நான் செருப்புத் தைக்கலாம் நீங்கள் வேதம் படிக்கலாம். ஆனால் அதன் காரணமாக என்னை ஏறி மிதிக்க உங்களுக்கென்ன அதிகாரமிருக்கிறது? ஒருவன் கொலை செய்தால் அவனைப் புகழ்வதாம். வேறு ஒருவன் ஒரு பழத்தை திருடினால் அவனைத் தூக்கிலிட வேண்டுமாம். ஜாதி துவேஷத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த அக்கிரமங்கள் ஒழிய வேண்டும். மனிதர் பலபிரிவுகளாக வாழ்வது தடுக்க முடியாது. உலகம் எங்கும் சென்றாலும் ஜாதிகளும் பிரிவுகளும் இருக்க காண்போம். ஆனால் அதன் காரணமாக எவருக்கும் தனி உரிமை இருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த தனி உரிமைகள் மண்டையிலடித்து ஒழிக்க வேண்டும்.

மீன் பிடிப்பவனுக்கு வேதாந்தம் கற்பித்தால் அவன் ''நீ எவ்வளவு நல்ல மனிதனோ'' அவ்வளவு நல்ல மனிதன் நானும் நாம் மீன்பிடிப்பவர்களாக இருக்கலாம் நீ தத்துவ ஞானியாகவிருக்கலாம். ஆனால் உன்னுள்ளத்திலிருக்கும் கடவுள் என்னுள்ளிலும் இருக்கிறார் என்று சொல்லுவான். எவருக்கும் தனி உரிமையில்லை, எல்லோருக்கும் வாழ்க்கையில் ஒரே விதமான சந்தர்ப்பங்கள் இத்தகைய சமுகந் தான் நமக்கு வேண்டும். ஒவ்வொருவர் உள்ளத்திலும் தெய்வீகத்தன்மை இருக்கின்றதென்பதை அவர்களுக்கு கற்பியுங்கள். அதற்குமேல் அவரவர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு வழிதேடிக் கொள்வார்கள்'' இவ்வாறு சமயத்தையும் சமுதாயத்தையும் விஞ்ஞானத்தையும், மெஞ்ஞானத்தையும் உலகியலையும் இறையியலையும் இணைத்த ஒரு முழுமையான வாழ்க்கை முறையை சுவாமி விவேகானந்தர் உலகுக்கு வழங்கியுள்ளார் சுவாமி விவேகானந்தரின் வாழ்வையும் உபதேசங்களையும் ஆழ்ந்து படித்து சிந்தித்து செயற்படுவோம். பிறரும் இவ்வழியில் செயற்பட உதவுவோம்

இன்றியமையாதவைகளாகும். உயிரே அழிந்திட நேரினும் அஞ்சாதிருப்பவனே அச்சத்தை வணங்குபவன் ஆகின்றான்.

வாழ்வனைத்திலும் மாறாத துன்பமே தோன்றிடும் அதை இன்பத்துடன் ஏற்றுக் கொள்பவனே துன்பத்தை வணங்குபவன் ஆகின்றான். இவ்வாறு அச்சத்தையும் துன்பத்தையும் வணங்குபவர்கள் அவைகளை அறவேவென்று விடுகின்றார்கள். எதற்கேனும் அஞ்சி ஓடுபவன் அவ்வுயர் நிலையை ஒரு போதும் அடையான். மரணத்துக்கு அஞ்சுபவன் அமிர்தத்துவம் அல்லது முக்தி என்னும் ஒப்புயர்வற்று செல்வத்துக்கு அருகதையற்றவன் ஆவான் சுவாமிகள் மாட்டு மிளிர்ந்தே ஆண்மையானது ஆத்ம சொருபமாகிய அஞ்சாமையேயாம்:

சுவாசிக்காமல் உயிர் வாழ முடியாதது போல உள்ளத்தில் ஓர் உருவத் தோற்றமின்றி நாம் எதையும் நினைத்துப் பார்க்க முடியாது. இணைப்புவிதியின்படி வெளி உருவம் உள்ளுருவத்தையும் உள்ளுருவம் வெளியுருவத்தையும் தோற்றுவிக்கின்றது. அதனால் தான் இந்து வழிபடும் போது ஒருபுறச் சின்னத்தை பயன்படுத்துகின்றான். அவனைக் கேட்டால் தான் வழிபடும் பரம்பொருளின் மீது தன் சிந்தனையைப் பதியச் செய்வதற்கு அது உதவுகிறது என்று கூறுவான். அந்த உருவம் கடவுள் அல்ல என்று உங்களைப் போல அவனுக்கும் தெரியும். புனிதம், தூய்மை, உண்மை எங்கும் நிறைந்த நிலை ஆகிய கருத்துக்களைப் பல்வேறு உருவங்களுடனும் தோற்றங்களுடனும் இந்துக்கள் தொடர்புபடுத்தியுள்ளனர். இந்துவின் சமயமோ இறைவனை உணர்வது மனிதனும் தெய்வமாவது திருவுருவங்கள், கோயில்கள், சின்னங்கள், நூல்கள் இவை எல்லாம் ஆண்ம ஞானத்தின் குழந்தைப் பருவத்தில் உதவும் ஆதாரங்கள். ஆனால் அவன் சாதனையில் முன்னேற வேண்டும்.

கேடுவிளைவிக்கும் சிற்றின்பத்தை நீத்தல் ஒன்றே மதங்கள் எல்லாவற்றிலும் பொதுவாகப் பொலியும் பெருமை என்பது அவரது துணிபு. அறிவிலார் மிக விரும்புகின்ற விஷயத்தை அறிவுடையோர் விஷயமென விலக்கித் தற்காப்பு அல்லது பிரம்மசரியம் என்னும் பெரும் பேற்றையே பற்றியொழுக வேண்டுமென்று அவர் வற்புறுத்துவார். இனியவை போல் வந்து இறுதியில் இன்னா விளைவிக்கும் போகத்தில் வாஞ்சை வைப்பது அழுகிய பிணத்தைப் பூவால் மூடுவதற்கு ஒப்பாகும் என்பார். கட்டுக்கு அடங்காத பொறிபுலன்களை அடக்கி வைத்திருப்பதில் சிரமம் எதையும் அவர் அறிந்திலர். இயல்பாகவே அவைகள் அவருக்கு வசப்பட்டிருக்கும். ''பொறிவாயில் ஐந்து அவித்தவனே துறவி'' என்னும் மறைமொழிக்கு அவரது வாழ்வு தக்க சான்றாக விளங்கி வந்தது. தெய்வத்தன்மையை விளக்குகின்ற புனிதம் அனைத்தும் புலனடக்கத்திலும் பிரமசரியத்திலும் அடங்கி விடுகின்றன என்பது அவரது கூற்று. அறம் என்பது இதனுள் அடங்கி விடுகின்றது. இதற்கு மாறாகத் தூய உணர்ச்சியைத் துடைத்து மெய்ப்பொருட் காட்சியை மறைப்பது எதுவோ அதுவே மறம் என்பர். அவாவை அறவே அகற்றி உள்ளத்தை அடக்கி ஒடுக்கி ஒருமைப்படுத்திக் கொள்பவனுக்கு உலகிலே தோன்றுகின்ற யாவும் தெய்வத்தன்மையுடனே திகழும் என்பது அவரது அனுபவம். ஆதலால் விருப்பு வெறுப்பு இரண்டும் அவரது துறவுக்கு ஒவ்வா உடலை உருக்கி வாட்டுவதாலும் ஆவது ஒன்றுமில்லை. மனதைப் பண்படுத்துவது ஒன்றே சுவாமிகள் அறிந்திருந்த சிறந்த தவமாகும்.

அறிவு அனைத்துக்கும் அடியும் முடியுமாக மிளிரும் வேதாந்தமே வடிவெடுத்து வந்தவர் நம் துறவி வேந்தர். அதன் நுண்பொருளை அவர் வெள்ளிடைமலையென விளங்கியருளியது மல்லாது, நித்திய வாழ்வுக்கு உறுதுணையாவது அதுவே என்பதையும் ஐயந்திரிபற அவர் நிருபித்திருக்கிறார் இடைக்காலத்தில் ஆனது போன்று வேதாந்தம் வெறும் சிந்தனைக்கு உரியதாய்ப் போய்விடலாகாது என்பது அவரது விருப்பம் சமுதாயத்தின் கண் உள்ள மாந்தர் அனைவரது உள்ளத்திலும் அது ஊடுருவிப் பாய்ந்து உயிர் வழங்க வேண்டும். சமயத்துறையில் சாதி என்பது கிடையாது சாதி என்பது ஒரு சமூக ஏற்பாடேயாகும் மிக உயர்ந்த சாதியைச் சேர்ந்தவனும் இந்நாட்டில் சந்நியாசியாகலாம். அப்போது இரண்டு சாதியும் சமமாகின்றன என்று எடுத்துரைத்தார்.

திருத்தொண்டு சின்னாளிலே செய்து முடிக்கப் பெறுவது அன்று நம் கண்ணெதிரே இடுக்கண்களும் பல காணப்படுகின்றன. ஆனால் எவ்வுயிர்க்கும் ஈசனாய் இருப்பவனே நமக்கு உறுதுணையானவன். அவனது திருநாமத்தை முன்னிட்டு அவன் மீது தளராத நம்பிக்கை பூண்டு வினையாற்றத் தொடங்குவோமாக. ஆதலால் உயிர் வாழ்ந்திடினும் சரி, கடவுளை நம்பி முழு மனதுடன் காரியத்திலே பிரவேசிப்போமாக.

வாழ்வானது மனம் போல மாங்கல்யமாயிருக்கின்றது. மக்கள் மாட்டுத் தெய்வத்தன்மை புதைந்து கிடக்கின்றது. அதை அவர்கள் உணர்ந்து அறிந்து ஓங்குமாறு செய்ய வேண்டும். இதற்காகவேதான் சுவாமிகளும் ''எழுமின், விழிமின் கருதிய கருமம் கைகூடும்வரை உழைமின், உழைமின்'' என்று உபதேசம் செய்தருளி வந்தார். இவர் பேரறிவிலே சங்கரர் போன்றும் காருண்யத்திலே புத்தர் போன்றும் பக்தியிலே நாரதர் போன்றும் பிரம ஞானத்திலே சுகதேவர் போன்றும், சம்வாதத்திலே பிருஹஸ்பதி போன்றும் கட்டழகிலே மன்மதன் போன்றும் வீரத்திலே அர்ஜுனன் போன்றும் வேத சாஸ

(தொடர்ச்சி 12 பக்கம்)

# விவேகானந்தர் கண்ட (பரப்பிய) இந்துமதம்

— தாமரைத்தீவான் —

இந்தியா என்றோதும் இந்துப்பழம் நாட்டில்
இந்துக் கடல் போன்ற இந்துமதம் பரப்பி
வந்த பெரியாரில் வங்கத்திலே உதித்த
''நந்தர்'' எனச்சொல்லும் நரேந்திரரை நாமமறவோம்!

கல்கத்தா என்கின்ற கங்கை நகரினிலே
நல்நாததத்தருக்கு நரேந்திரரும் வந்தாரே!
கல்விக்கடல் எனினும் கற்றதுவோ கொஞ்சந்தான்!
நல்ஆசை - ஆண்டவனை நாடிடவே பேராசை!

ஆசை அலைமோத அங்கிங்கெல்லாம் ஓடி
ஓசை ஒலி இன்றி ஒவ்வொருவராய்க் கண்டு
பேசி அறியலுற்றார் - பெரிய வினாத் தொடுத்தார்!
கூசினார் நல்லவிடை கூறமுடியாதார்!

கண்டீரோ ஆண்டவனை? காட்டுவீரோ எந்தனுக்கு?
விண்டுரைப்பீர், நீர்காண வில்லையெனில் சொல்லிடுவீர்!
உண்டோ - இவையாமோ? உண்மையோ - பொய்யாமோ?
திண்டாடுகின்றேன் நான், தெளிவாய் உரைசெய்வீர்!

என்றெல்லாம் கேட்டா ரே, எவரும் விளக்கவில்லை!
நின்ற இடம் விட்டோடி நிம்மதியே காணாமல்
அன்றிருந்த தாகூரை அணுகி - அவர் மூலம்
நன்றறிந்து வழிகேட்டும் நடந்தார்''பரம''ரிடம்!

ஸ்ரீராமக்கிருஷ்ணரிடம் சென்றார் - தரிசித்தார்!
அறியாதிருக்கின்றேன் ஆண்டவனை, ஐயாநீர்
அறியத்தரல் வேண்டும், ஆண்டவனை நான்காண!
சிறிதாய் உதவுங்கள், தெளிவதனைத் தாருங்கள்!

என்றுரைத்தார் நரேந்திரனார், ''இரு'' என்றார் பரமஹம்சர்!
நன்றுரைத்தாய் - நற்கேள்வி, நாட்டினிலே உள்ளோரில்
இன்றுவரை எவரேனும் இவ்வாறு கேட்டறியேன்!
ஒன்றுரைப்பேன் - காட்டுகிறேன், உண்மையிது - நம்பென்றார்!

காளிஅருள் பொழியக் கல்லாது கற்றுணர்ந்து
நாளும் பொழுதும் என நற்றேவிப் பூசை செய்யும்,
நாழிகையும் வீண்போக்கா நற்பரமகம்சர்வர்
ஆழமுடன் நரேந்திரரை அன்போடு நோக்கினரே!

நேர்நோக்கு நோக்கியதால் நீண்டநெடுநேரம்
ஆர்வப் பெருக்காகி ஆனந்த நீர் சொரிந்து
கார்மேகம் கண்ட கலாபம் எனக்களித்து
போர் உள்ளம் மாய்ந்தே புனிதமனம் பெற்றார் !

அன்பால் அடிபணிந்து அமைதிமிகப் பெற்று
மின்சாரம் பாய்ந்திட்ட மேனி என அடங்கி
தன்னையே தானறிந்து சரணாய்க் - குருவான
அன்னையருள் பெறுகம்சர் அருளை இவர்பெற்றாரே !

உன்உள்ளே இறை உள்ளான், ஒரு இடமும் தேடாதே !
உன்னையே நீ உணர்வாய் - ஒளிபிறக்கும், இருள் அகலும் !
என்சீடன் இனி நீயே ! என்சக்தி உனக்கருள்வாள் !
உன்மதத்தை உன்பணியால் உலகெல்லாம் நீ பரபரப்பாய் !

இத்தலமும் இப்பொருளும் இவ்வமைப்பும் எல்லாமே
உத்தமனே உன்பொறுப்பு ! ஒப்படைத்தேன் உன்னிடமே !
சித்தம் கலங்காதே, சிந்தித்தே செயலாற்று !
அத்தனைக்கும் பெரியபலம் ஆத்மபலம், அறிவாயே !

என்றுரைத்தார் - நோய்கண்டார், இராமகிருஷ்ண பரமகம்சர் !
வென்றுலக வாழ்வொழித்து விண்ணுலகம் எய்தியபின் !
நன்றவரின் பணியெல்லாம் நமது விவேகானந்தர்
சென்றுரைத்தார் திசையெல்லாம் - செயலாற்றப் புறப்பட்டார் !

பாரதத்தின் பலஇடமும் பாதயாத்திரை செய்த
வீரவிவே கானந்தர் வெற்றிமேல் வெற்றிபெற்றார் !
நேரமெலாமிந்துமத நினைவிலே செலவிட்டார் !
சாரமனைத்தையுமே தந்தாரே ஆய்ந்தெல்லாம் !

ஒருநூறு ஆண்டின்முன் உத்தமனார் அமெரிக்கப்
பெருஞ்சிக்காக்கோ சென்றார். பெரும்பயண மதுவாகும் !
அருஞ்சொற் பொழிவுகளை ஆற்றினார் - அத்தனையும்
கரும்பான ஆங்கிலத்தின் கருத்தான இந்தேதான் !

இந்து மதம் தத்துவத்தின் இயற்கை மதமென்றும்,
முந்துமதம் - அதினின்றே முகிழ்த்த தெலாமென்றும்,
எந்தமதமானாலும் இருக்கும் நல மென்றும்
இந்த மதத்திலுள்ள தெல்லாமே, என்றுரைத்தார் !

அருவம் - உருவந்தான், அநாதி நவீனந்தான் !
இருமையும் உண்டேதான், இம்மை - மறுமைதான் !
பெருமை சிவசக்தி, பிறவிப்பயன் இதுதான் !
அருமைச்சமயம் இது, ஆழ்மாகடல் என்றார் !

பெறுதற்கரிதிந்தப் பிறவி மனிதன்தான் !
மறுபிறப்புண்டேதான், மாற்றுவாழயுமுண்டே !
வெறுவாய்ச்சமயம் அல, விதி - வாழ் சமயமிதே !
பெறுவார் முறை வாழ்ந்தோர் பெரியயன், என்றுரைத்தார்.

ஆன்மா உயிர் இல்லை ! அழிவும் அதற்கில்லை !
நான் என்பது மில்லை ! நம்மைநாம் அறிவதுவே !
ஊன் - கொலை - பெண் - மது - சூது, ஒழித்தால் உயர் பதவி !
ஏன் ? என்னும் வினாக்கட்கும் ஏற்றவிடை உண்டென்றார் !

உரிமைச்சமயம் இது ! உணர்வுக்குரியதிது !
பரிவன்பு - தாய்ப்பாசம், பற்றும் - துறப்புமிது !
அரிதான உட்பொருளின் அறிவுச்சமயம் இது !
விரிவான அண்டம் இது ! விடுதலையும் உண்டென்றார் !

பிறமதத்தார் இவைகேட்டுப் பெருமகிழ்ச்சி கொண்டார்கள் !
அறம் - அன்பு - அறிவென்ப தனைத்தும் அறிந்தார்கள் !
மறவாத சொற்பொழிவை மனதில் பதித்தார்கள் !
இறவாத மதம் இந்தே என்பது ணர்ந்தார்கள் !

எங்கள் கொழும்பினிலும், எழில்யாழ் நகரினிலும்
தங்கமதம் பற்றித்தகுசொற் பொழிவாற்றி
வங்கத்திற்கேகினார், வரவேற்றார் எல்லோரும் !
எங்கும் பெருமதிப்பாம், எமது விவேகருக்கே !

இவருக்கினிய சபை - இராமருக் கும்சங்கம்
நவநல்லுலகினிலும் நல்லபணி செய்வனவாம் !
பவப் பிணியைப் போக்கும் பல்வேறு நல்மருந்தும்
தவறாது யாவர்க்கும் தந்துதவும் அமைப்புக்கள் !

ஒருகடலில் வீழ்கின்ற உயர்நதிகள் போன்றனவே
பெருமதங்கள் என்றுரைத்த பேருரையின் நூற்றாண்டை
வருநாளின் மாணவரும் வாழ்விற் கடைபிடிக்க
அருப்போட்டி - விழா - பரிசு அனைத்தும் செயல் நலமே!

அகில உலகினிலும் அழகிந்து வைப் பரப்பும்
தகுதி படைத்திருந்த தன்மையினாலிங்கிவரை
இகமும் பரமும் வாழ் விந்தினர்கள் மட்டுமல்ல,
அகமுடையோர் மறவாரே, அவர்நாமம் வாழியவே !

(9ம் பக்க தொடர்ச்சி)

## சமய தத்துவக்.....

திர ஞானத்திலே வியாசர் போன்றும் அவதரித்தவ ராவர் எனவே இவரது தெய்வத் தன்மையில் ஒரு சிறிது எய்துதற்கு நம்மைப் போன்றவர்கள் எத்தனை ஜன்மம் எடுத்தால் இயலும் என்று இயம்பவல்லவர் எவர் ! நானிலத்திலே இவர் நாற்பது வருடங்கூடத் திருமேனி தாங்கி வாழ்ந்திருந்தாரில்லை. எனினும் இவர் நிகழ்த்திய பரமார்த்திகப் பேரியக்கமானது பாரெங்கும் பொங்காது பரவி வருகிறது. இவர் ஈட்டிய நெறி முறையான்து. வெளிப்படையாகவும் அடிப்படையாகவும் பல துறைகளிற் புகுந்து மாந்தர் பால் புத்துயிரும் புனிதமும் வழங்கி வருகின்றது. அன்னவரது ஆண்மையை, அருட்சக்தியை, ஆன்மீகத்தையே அறிந்திட வல்லவர்கள் மிகுந்திடுவார்களாக வையகமும் துயர் தீர்ந்து உயர்ந்திடுவதாக.

# இந்து இளைஞரின் எழுச்சிக்கு வித்திட்ட பெரியார்
# சுவாமி விவேகானந்தர்

செல்வி தே. உஷாசுபந்தினி (தி/உவர்மலை தமிழ் மகாவித்தியாலயம்)

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பேருரையின் நூற்றாண்டு விழாவையொட்டி தி. மா. இ. இளைஞர் பேரவையால் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற கட்டுரை.

இந்து இளைஞரின் எழுச்சிக்காக இறைவனாலே அனுப்பப்பட்டவர் போன்று இந்திய மண்ணில் உதித்த அரும்பெரும் பெரியார் சுவாமி விவேகானந்தர் அவர்கள். சுவாமி விவேகானந்தர் அவர்கள் இப்பாரினில் வாழ்ந்த காலங்கள் முப்பத்தொன்பதரை ஆண்டுகள் மாத்திரமே. ஆயினும் அவர் ஆற்றிய பணிகளை நாம் எடுத்துக் கூறமுடியாது. அவ்வளவிற்கு எண்ணிலடங்கா சேவைகள் செய்துள்ளார். உறங்கிக்கொண்டிருந்த இந்து இளைஞரைத் தட்டி எழுப்பிய தெய்வத் தொண்டன் சுவாமி விவேகானந்தர் அவர்கள்.

சுவாமிஜியின் வாழ்க்கையும் பணியும் இருவிதமான முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை ஆரம்பத்திலே கூறுவது அவசியமானதாகும். அதில் ஒன்று நவீன இந்தியாவை மீண்டும் உயிர் பெறச் செய்தல் என்ற போரில் தாக்குவதற்காக முன்னால் செல்லும் படைகளின் உயர்ந்த தலைவர், நாட்டு மக்களை அடிமைத்தனத்திலிருந்து தட்டி எழுப்பி நாட்டின் முன்னேற்றத்திற்குப் பணிபுரியும்படி வீர முழக்கம் செய்தவர் சுவாமி விவேகானந்த அடிகளார். இரண்டாவது வேதாந்தச் செய்தியினை உலகிற்குப் போதித்த போதகர் இவர்.

வெல்வதற்கரிய ஆற்றல் படைத்திருப்பதாக கருதப்பட்ட மொகலாய சாம்ராஜ்யத்தை வீழ்த்தி அதனுடைய வீழ்ச்சியின் போது அளப்பரிய பலத்தைப் பெற்று வெற்றிக் கொடி நாட்டிய ஆங்கில வியாபாரக் கம்பனியைக் கண்டு இந்தியா பிரமித்து நின்ற காலத்தில் தோன்றிய விவேகானந்தர் அவர்கள் ''இந்தியச் சுதந்திரத்தின் விடிவெள்ளி'' என உலகினால் போற்றப்பட்டார். அக்காலத்திலே மொகலாயர்களிற்கு ஏற்பட்ட தோல்வி இந்தியப் பண்பாட்டிற்கு ஏற்பட்ட மாபெரும் தோல்வியாகும். ஆங்கிலேயருக்கு இந்த மாபெரும் ஆற்றலை நல்கிய மேலைநாட்டு ஸ்தாபனங்கள் விஷேசத் திறமை வாய்ந்ததாக இருக்க வேண்டுமென இந்தியா அந்த நாட்டில் கருதி வந்தது, இந்திய மக்கள் மத்தியில் இருக்கும் தவறுகளைத் திருத்துவதற்குப் பதிலாக சீர்திருத்தவாதிகள் இந்தியச் சமுதாய அமைப்பையும் சமயத்தையும் கடுமையாகத் தாக்கினர்: யாருமறியாத துறவியாக சுவாமி அவர்களிற்கு சர்வமத மகாசபையில் கிடைத்த வரவேற்பு, மேலைநாட்டு அறிஞர்களும் கிறிஸ்தவர்கள் அதுவரைப் பெற்றிருந்த வரவேற்பைப் பூரணமாக மறைத்தது.

உறங்கிக் கொண்டிருந்த இந்து இளைஞரைத் தட்டியெழுப்ப சுவாமி விவேகானந்தர் கூறிய பின்வரும் உரையானது இந்து இளைஞரின் எழுச்சிக்கு வித்திட்டது.

''ஓ! இந்திய நாட்டின் முதுகெலும்பான இளைஞரே, மற்றவர்களைப் பார்த்து வெறுமனே பின்பற்றுவது, மற்றவர்களைச் சார்ந்திருப்பது. இந்தக் கோழைத்தனமான அடிமை எண்ணம், இந்த வெறுக்கத்தக்க கோழை எண்ணத்தில் மூழ்கிக் கிடக்கும் இந்து இளைஞர் இந்த வெறுக்கத் தக்க கொடூரம் இவைகளைக் கொண்டு மட்டும் பண்பாட்டின் உச்ச நிலையைப் பெற முடியுமா? ஆண்மை மிக்கவர்களும், வீரர்களும் மட்டுமே அடையத் தகுதி பெற்ற விடுதலையை வெட்கப்படத்தக்க கோழைத்தனத்தால் அடைய முடியுமா? என்று இந்து இளைஞரின் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்புவது போல் வீர உரையாற்றி விழிக்கப்பண்ணினார்.

அன்று, சுவாமி விவேகானந்தர் வாழ்ந்த நாட்களின் ஆரம்பத்தில் இந்து இளைஞர் மாபெரும் இருளில் மூழ்கியிருந்தனர். மக்களிடம் இருந்த பலதரப்பட்ட வேறுபாடுகளைக் குவித்து அவற்றை ஒருமைப்படுத்தி இந்து இளைஞரின் உணர்வு கொழுந்துவிட்டெரியும் நெருப்பை உருவாக்கிய கண்ணாடியாக விளங்கினார்.

இந்து இளைஞர் என்ற உயிர்காக்கும் செடியானது கருகிச் சாயும் வேளையிலே கங்கை நீர்போன்று பாய்ந்து வந்து உயிர்ப்பூட்டிக் கருகிய செடியினைத் துளிர்விடச் செய்தார் சுவாமிஜி அவர்கள், இவ்வாறு இந்து இளைஞரை விழிப்படையச் செய்வதன் மூலம் பாரத நாட்டையும் இந்து சமயத்தையும்

சூழ்கியிருந்த காரிருளை மறைத்தார். புத்தொழி ஊட்டினார் பெரியார் விவேகானந்தர்.

ஒவ்வோர் ஜீவாத்மாவிடமும் தெய்வத்தன்மை பொருந்தியுள்ளது'' என்று ஆர்வமான உரையை இந்து இளைஞர் மத்தியில் வார்த்தார். ''உங்களால் முடியாது என்று எதுவும் இல்லை'' என்று ஒவ்வோர் ஆண்மகனையும் உயிர்ப்புப் பெறச் செய்தார். இந்து இளைஞரின் முக்கியத்துவத்தை அவர்களிற்கு உணரவைத்தார். அவர்கள் உறங்கிக்கொண்டு போவதால் பாரத தேசம் சென்று கொண்டிருக்கும் பேரழிவைத் தெட்டத் தெளிவாக விளங்கப்பண்ணினார். இந்து இளைஞரின் விழிப்பால் ஏற்படும் பின்விளைவுகளை அவர்களிற்கு எடுத்துரைத்து விளங்கவைத்தார். இந்து இளைஞர் ஒன்று திரள வேண்டியதன் அவசியத்தை அவர்களுக்கு எடுத்துரைத்தார். அதனால் பின்னால் உண்டாகும் பெரும் மகிழ்வையும் கூறினார். ஒவ்வொரு இளைஞனின் இருதயத்தையும் விழிக்கவைத்தார்.

நான் என்ற உணர்வை வளர்த்தார். என் தேசம், என் மதம் என்று ஒவ்வொரு இளைஞனையும் விழிக்கவைத்தார் விவேகானந்த அடிகளார்.

''இறைவன் நமது சார்பில் இருக்கின்றான்'' என்பதை அறியுங்கள் எனவே தைரியத்துடன் முன்னேறுங்கள். ''எனது வீர இளைஞரே! உத்தம குணம்வாய்ந்த நல்லோரே! செயல் புரியத் தொடங்குங்கள். தேச முன்னேற்றம் என்ற தேரைக் கிளப்ப உங்கள் தோள்களைக் கொடுங்கள்'' என்று ஒவ்வோர் இளைஞனையும் அழைத்தார்.

''நெருப்புச் சுவாலை போன்று இருக்கக் கூடிய இளைஞர் குழு ஒன்றிற்குப் பயிர்சி தந்து அதனைத் தயார்ப்படுத்துங்கள்'' என்ற சுவாமி விவேகானந்தரின் அடிப்படை உரையிலே விழிப்புணர்ச்சி பெற்று எழுந்து நின்றது இந்து இளைஞர் குழு.

''வேலையைச் செய்யுங்கள் அதற்கான வேகத் தீ உங்களை வந்தடையும். வாழ்நாள் குறுகிய அளவானது. பெருங் காரியம் ஒன்றின் பொருட்டு அதைத் தியாகம் செய்து விடுவீர்களாக! தைரியம் மிக்க இளைஞரே நீங்கள் மகத்தான காரியங்களைச் சாதிப்பதற்காக பிறந்தவர்கள். உங்களில் ஒவ்வொருவரும் பேராற்றல் படைத்தவராக வேண்டும். இது நிச்சயம் முடியும் என்றே நான் கூறுகின்றேன். நீ எதை நினைக்கின்றாயோ நீ அதுவே ஆகின்றாய். உன்னை வலிமையானவன் என்று எண்ணு. இந்து இளைஞர் சமுதாயத்தின் முதுகெலும்பு என்று எண்ணு. நிச்சயம் வெற்றி உன்கையில்''

இவ்வாறு அன்று உறங்கிக் கொண்டிருந்த இந்து இளைஞரைத் தட்டி எழுப்பி வீரமுரசு கொட்டி, ''வெற்றி முரசை உங்கள் கையில் எடுங்கள்'' என்ற விதப்புரையை, விழிப்புரை வழங்கி இந்து இளைஞரின் எழுச்சிக்கு வித்திட்ட தெய்வம் சுவாமி விவேகானந்தர்.

எம் பெருமான் அன்று உத்தரவிட்டால் இன்று இந்து இடைஞர் சமுதாயம் எங்கே தோன்றியிருக்கும். இவ்வாறு இறைபணியாற்றிய சுவாமி விவேகானந்தர் வாழ்க. அவரால் விடப்பட்ட இந்து இளைஞர் வளர்க.

## கண்ணீர் அஞ்சலி

திருக்கோணமலைப் பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் அமரர் செல்லப்பா சண்முகசுந்தரம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

அன்னார் எமது பேரவையின் நடவடிக்கைக் குழு உறுப்பினராகவும் ஆலோசகராகவும் இருந்து பேரவையின் நலனில் அக்கறை காட்டியவர்.

இன்று திருக்கோணமலைப் ப. நோ. கூ. சங்கம் உயர்ந்து விளங்குகின்றதென்றால் அது திரு. சண்முகசுந்தரம் அவர்களின் கண்ணியம் மிக்க உழைப்பிலேயே என்பதை இந்த நாடே நன்கறியும். இலங்கை அரசின் பல புலமைப் பரிசில்களைப் பெற்று இந்தியா, சோவியத்ருஷ்யா, தாய்லாந்து முதலான நாடுகளுக்கெல்லாம் சென்று பயிற்சி பெற்று வந்த இவர் எல்லோருக்கும் இனியவராக விளங்கினார். அன்னாரின் மறைவு எமது மண்ணுக்கு ஏற்பட்ட ஓர் பேரிழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர், கூட்டுறவாளர்கள் எல்லோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்குகின்றோம்.

(சிவநெறிக் குழுவினர்)



அமரர்
செல்லப்பா சண்முகசுந்தரம்

# சுவாமி விவேகானந்தரும் இராமகிருஷ்ணரும்

— செல்வி செல்வரஞ்சனி செல்வராஜா (ஆண்டு 11A, தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி)

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பேருரையின் நூற்றாண்டு விழாவையொட்டி தி மா. இ. இளைஞர் பேரவையால் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற கட்டுரை.

வங்காளத்திலே கல்கத்தா நகர் ஆங்கிலேயர் ஆட்சியின் நிலைக்களமாக விளங்கியது. அந்நகரிலுள்ள உயர் நீதிமன்றத்தின் விசுவநாத தத்தர் என்பவர் பணிபுரிந்து வந்தார். அவருடைய மனைவியார் பெயர் புவனேஸ்வரி தேவியார். அவர்களுக்கு 1863ம் ஆண்டு சனவரி மாதம் 12ம் திகதி ஓர் ஆண்பிள்ளை பிறந்தது. அதற்கு அவர்கள் நரேந்திரன் எனப் பெயரிட்டனர். நரேந்திரன் தனது இளமைப் பிராயத்தில் வங்காளி, ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளையுந் துறைபோகக் கற்றான். அம்மொழிகளில் அமைந்த இலக்கியங்களைச் சுவைத்தான். வரலாற்று நூல்களை விரும்பிப் படித்தான். உபநிடதங்களையும், மேலைநாட்டுத் தத்துவங்களையும் பைபிள், குரான் போன்ற சமய நூல்களையும் தனது நுண்ணிய அறிவு கொண்டு ஆராய்ந்தான். மேலைத்தேய, கீழைத்தேய நுட்பங்களை ஒருங்கு பெற்ற பீ. ஏ பட்டதாரியானான். கடவுட்பற்று அவனுடன் கூடவே பிறந்தது போலும்! துடுக்கு மிகுந்த இச் சிறுவனை அடக்குவதற்கு புவனேஸ்வரி அம்மையார் படாதபாடுபடுவர். குளிர்ந்த நீரை தலையிற் கொட்டி காதில் ''சிவ, சிவ'' என்று ஓதினால் துடுக்கு எப்படியோ அடங்கிவிடும். ''நரேன் நீ நல்ல பிள்ளையாக ஒழுகாவிட்டாற் சிவபிரான் உன்னைக் கைலாயத்துக்கு வரவிடமாட்டார்'' என்று கூறினாலும் பேசாது அவன் இருந்து விடுவான், பூஜை அறையில் உலகை மறந்து தியானத்திலும் அவன் அவ்வப்பொழுது மூழ்கிவிடுவான். சுலபமாக மனதை ஒரு முகப்படுத்த கூடியவன். அவனுடன் கூட அவனது கடவுள் பற்றும் வளர்ந்து வந்தது.

பதினெட்டு வயது நிரம்பிய இவ்வாலிபனது உள்ளத்திற் கடவுளைக் காண வேண்டும் என்னும் ஆசை கொழுந்து விட்டு எரிந்தது. இந் நிலையிலே தான் தக்கிணேஸ்வரத்து இராமகிருஷ்ணரை முதன் முதலில் அவன் சந்தித்தான். இராமகிருஷ்ண பரமஹம்சரை அவன் அவ்வாறு முதலிற் சந்தித்தது 1881ம் ஆண்டில் இராமகிருஷ்ணர் நரேந்திரன் சந்திப்பு ஆன்மீக வரலாற்றிலே மிக மூக்கியமானதொரு நிகழ்ச்சி. இராமகிருஷ்ணர் நூலறிவு இன்றி அனுபவ ஞானம் கைவரப்பெற்றவர். இறையனுபவத்தில் மூழ்கித் திளைத்தவர். பாரதத்தின் பாரம்பரிய மரபில் வளர்ந்தவர், எளிமையே வடிவானவர், அத்தகையவர் முன்னிலையிலே ஆங்கிலக் கல்வி தந்த ஆணவ மிடுக்குடன் ஓர் இளைஞன் வருகிறான், பழைய பாரதத்தை நவீன பாரதம் சந்திக்கின்றது.

''ஐயா, தாங்கள் கடவுளைக் கண்டிருக்கின்றீர்களா? என்று தான் இதுவரை மனதில் சுமந்து வந்த கேள்வியை இராமகிருஷ்ணரிடம் வெளியிடுகிறான், நரேந்திரன். ''உள்ளம் கருதிய சீடன் வந்து விட்டான் என்று பெரு மகிழ்ச்சி அடைகிறார். இராமகிருஷ்ணர். ''கண்டிருக்கிறேன். பிள்ளாய் கண்டிருக்கிறேன், இதோ உன்னை என் கண்முன் காண்கின்றேன் அல்லவா? அதுபோல அவனையும் கண்டிருக்கிறேன். இல்லை உன்னை நான் காண்பதை விட இன்னமும் தெளிவாக அவனைக் கண்டிருக்கிறேன். என்று அவர் விடை பகருகின்றார். அவற்றைக் கேட்ட நரேந்திரனின் உள்ளம் பூரித்தது. இராமகிருஷ்ணரின் விருப்பத்துக்கிணங்கி நரேந்திரன் அடிக்கடி தக்கிணேஸ்வரம் வந்தான். அவருடைய வார்த்தைகள் ஒவ்வொன்றையும் சீர்தூக்கிப் பார்த்துத் தான் நரேந்திரன் ஏற்றுக் கொள்வான். இடைக்காலத்தில் தந்தையார் இறந்து, வறுமையிலே தனது குடும்பம் வாழ்ந்து வாடிய பொழுது நாத்திகனாகவும் அவன் மாறியவன், ஆனால் நாட்செல்லச் செல்லப் பரமகம்சர் தொடர்பாற் கடவுளைப் பற்றி அவன் கொண்ட ஐயங்கள் நீங்கின. இராமகிருஷ்ணரைக் குருவாக ஏற்றுக் கொள்ளும் நிலை வந்தது.

குருவின் அருளினாற் பேரறிவும் இறையனுபவங்கள் பலவும் பெற்றான் நரேந்திரன். அவ்வின்ப அனுபவங்களிலே திளைத்திருக்க விரும்பினான். ''நரேன் இது உனக்குத் தகாது. ஆல மரமாய் நின்று ஆயிரக் கணக்கான மக்களுக்கு நிழல் தருவாய் என்றல்லவா நினைத்தேன் நீயோ உனது விமோசனத்தை மட்டுமே நாடுகிறாய்'' என்று அவனது சமூகப் பணியை அவனுக்கு நினைவுறுத்தினார். பரமஹம்சர் குருநாதரால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டான். நரேந்திரன், ஐந்து ஆண்டுகளிலே அவரது சீடர்களுக் கெல்லாம் அவன் தலைவனானான். குருநாதர் தொடர்பால் அவன் அறிந்து கொண்ட உண்மைகள் பல. கடவுள் என ஒருவர் உண்மையில் இருக்கிறார். அனுபவத்தால் மட்டுமே அவரை அறி

ந்து கொள்ளலாம். கடவுட் காட்சி பெறுதலே எமது இலட்சியமாக இருக்க வேண்டும். கடவுள் உருவமற்றவராகவும் உருவமுடையவராகவும் இருக்கிறார். உருவச் சிலைகளிற் கடவுளைக் காணும் நாம் அவரை உயிருடன் உலவும் மனிதரிலும் காணலாம். மனிதரில் வதியும் அவ்விறைவனுக்கு நாம் சேவை செய்தல் வேண்டும். ஒருவனது வயிற்றுப் பசியைத் தீர்த்த பின்பே அவனுக்குச் சமயம் போதிக்கலாம்'' இத்தகைய கருத்துக்கள் யாவற்றையும் தன் குருநாதரிடமிருந்தே பெற்றுக் கொண்டான் நரேந்திரன்.

நூலறிவு பெற்றிருந்த நரேந்திரனுக்கு குருவின் அருளினால் அனுபவ ஞானமும் கைகூடியற்று உலகினர்க்கு உய்யும் நெறி காட்டும் தகுதியினையும் அவன் பெற்றுவிட்டான் தம் சக்தி அனைத்தையும் நரேந்திரனுக்கு ஈந்து 1886ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ந் திகதி இராமகிருஷ்ணர் இறைவனடி சேர்ந்தார். அவர் ஏற்றிய ஞானத்தீபம் சுடர்விட்டு எரிய ஆரம்பித்தது. இதன் குருநாதர் கருத்தின்படி மக்கட் சமூகத்துக்குச் சேவை செய்வதே இனி தன் கடனெனக் கொண்டான். நரேந்திரன் துறவு வாழ்க்கையை அவன் விரும்பி ஏற்றான். இத்துறவியின் பெயர் சுவாமி விவேகானந்தர்.

1893ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் திகதி உலகின் ஆன்மீக வரலாற்றிலே முக்கியத்துவம் வாய்ந்த தினம் சமயப் போட்டிகள், பூசல்கள் தலையெடுத்த ஒரு காலத்தில் உலகின் வரலாற்றிலேயே முதன் முதலாக ஒரு சர்வமத மகாநாடு கூட்டப்பட்டது மதத் தலைவர்கள் பலரும் கூடியுள்ள மாநாட்டிலே அன்பர்களது வேண்டுகோளுக்கு இணங்கி இந்து மதத்தின் பிரதிநிதியாகக் கொண்டார். சுவாமி விவேகானந்தர் இந்து மதத்தின் பெருமையை உலகறியச் செய்யும் பணி அவரைச் சார்ந்தது. மூன்று வருட காலம் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இந்து மதப் பணியாற்றிய புகழுடன் திரும்பிய மகானை முதலில் உபசரிக்கும் பாக்கியத்தைப் பெற்றவர்கள் கொழும்பில் வாழ்ந்த சைவ மக்கள். பரவாழ்வுக்கு உதவும் சமயப் பணியுடன் இகவாழ்வுக்கு வழிகாட்டும் சமூகப் பணியையும் ஒருங்காற்றுதற்கென குருநாதர் பெயராற் சத்சங்கம் ஒன்றை அவர் உருவாக்க முயன்றார் அதன் விளைவாகத் தோன்றியவையே இன்று நாம் காணும் இராமகிருஷ்ண சங்கம். இராமகிருஷ்ண மடங்கள் என்பன. அவை எண்ணிறந்த மக்களுக்கு, மருந்தளித்து, உணவளித்து, உடையளித்து, கல்வியளித்து வருகின்றன. மக்கட் குலம் உடற் பலமும் மனவளர்ச்சியும் பெற்று ஆன்மீக விடுதலைக்கான முயற்சியில் ஈடுபட அவை வழி வகுக்கின்றன. அத்துடன் தருமம் மற்றும் பிரசங்கங்களுக்கு முதலிடம் கொடுக்கின்றன.

மக்களுக்குத் தத்துவங்களை மட்டும் தந்தாற் போதாது. முதலில் அவர்களுக்கு உணவு, உடையும், இருக்கையும் அளிக்க வேண்டுமென அவர் விரும்பினார். ஆண்டவனைத் தேடி நாங்கள் எங்கும் போக வேண்டியதில்லை. துன்பப்பட்டவர்கள், ஏழைகள், பலவீனர்கள், இழிந்தோர் ஆகிய யாவருந் தெய்வ வடிவங்களே என்று அவர் கருதினார். ''ஏழைக்காக எவனது உள்ளம் கசிகிறதோ அவனையே மகாத்மா என்கிறேன்.'' என்று 1895ம் ஆண்டு நியூயோர்க்கிற், சொற்பொழிவாற்றியவர் அவர் ஏழைகளுக்கென வாழ்ந்துவந்த காந்தியடிகளுக்கும் மகாத்மா என்னும் பட்டத்தைத் தமது ஞான திருஷ்டியினால் முன்மொழிந்து வைத்தார் போலும்.

பாரத தேசத்திற்கும், உலகிற்கும் ஒளியேற்ற வந்த அன்பராக, அறிவுத் தீபமாக, ஞான வீரராக இவ்வுலகில் நாற்பது ஆண்டுகளே வாழ்ந்து 1903ம் ஆண்டு ஜுலை மாதம் 4ம் திகதி சுவாமி விவேகானந்தர் இறைவனடி சேர்ந்தார்.




திருக்கோணமலை மாவட்ட ஒக்ஸ்பாம் பிரதிநிதியான திரு. ஹெனிஹேயர் அவர்களுக்கு திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் அண்மையில் நடாத்தப்பட்ட தேனீர் விருந்துபசார வைபவத்தில் அன்னாரையும் கலந்துகொண்ட பேரவையின் சிறுவர் அணியினரையும் படத்தில் காணலாம்.



1.




2.


3.

1. தி. மா. இ. இளைஞர் பேரவை நடாத்திய மூன்றாவது திருவாசக விழாவில், சிவபுராணம் மனனப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற செல்வி. இ. அஜித்தா சிவபுராணம் பாராயணம் செய்வதையும் மேடையில் பிரமுகர்கள் வீற்றிருப்பதையும் காணலாம்.

2. திருவாசக விழாவில் கிழக்குப் பல்கலைக்கழக தத்துவஇயல் பேராசிரியர் கலாநிதி வே. இராமகிருஷ்ணன் அவர்கள் சிறப்புரை ஆற்றுகின்றார்.

3. கடந்த 6- 3 - 94 ல் தி/ புனித பிரான்சிஸ் சவேரியார் மகாவித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட மூன்றாவது திருவாசக விழாவில் கலந்து கொண்டோரில் சிலர்.




திருக்கோணமலைக்கு அண்மையில் வருகைதந்த நல்லை குருமகா சந்நிதானம் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளுக்கு தம்பலகமம் இந்து இளைஞர் மன்றத்தினர் தம்பலகமம் மகாவித்தியாலயத்தில் வரவேற்பளிக்கின்றனர்.



சர்வதேச மகளிர் தினத்தன்று பேரவையின் இந்து மகளிர் அணியினர் திருமலை முதியோர் இல்லத்திலுள்ளவர்களுக்கு அளித்த மதியபோசன விருந்தின்போது அணித்தலைவி திருமதி பத்மா சிவபாதலிங்கம் அவர்களும் காணப்படுகின்றார்.



ஒக்ஸ்பாம் பிரதிநிதி திரு. ஹெனி ஹேபர் அவர்களின் தேனீர் விருந்துபசார வைபவத்தில் தற்போதைய ஒக்ஸ்பாம் பிரதிநிதி செல்வி டெனிக்கா அவர்களும் பேரவையின் நிர்வாகிகள் உத்தியோகத்தர்களுடன் காணப்படுகின்றார்.



தி. மா. இ. இ. பேரவையினால் சமூக அபிவிருத்தி உதவி நிறுவன உதவியுடன் அண்மையில் உப்புவெளியிலுள்ள றோமன் கத்தோலிக்க பயிற்சிக்கூடத்தில் பேரவையின் தொண்டர்களுக்கும் பகுதி இ. இ. மன்றப் பிரதிநிதிகளுக்கும் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சிக்கருத்தரங்கின் இறுதி நாளன்று பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் திரு. செ. சிவபாதசுந்தரம் உரையாற்றுகின்றார்.

# திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செய்திச்சரம்

★ தி. மா. இ. இ. பேரவையின் மூன்றாவது திருவாசகவிழாஅண்மையில் சிறப்பாக நடத்தப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி வே. இராமக்கிருஸ்ணன் அவர்கள் "திருவாசகமும், சைவசித்தாந்தமும் என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள்.

★ வருமானப் பெருக்கத் திட்டத்தின் கீழ் பேரவையால் திருக்கோணமலைப் பிரதான வீதியில் ஓர் அழகு சாதனை விற்பனை மாளிகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது பேரவையின் சிறு கைத் தொழில் ஆக்கத் துறைப் பொறுப்பாளர் திரு. பா. சுசீதரன் இதனை முன்னின்று நிர்வகித்து வருகின்றார்.

★ மூதூரில் அன்னைச் சாரதா மகளிர் இல்லம் ஒன்றை ஆரம்பிப்பதற்குப் பேரவை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது இவ் இல்லத்திற்காகப் பேரவையின் நிதியிலிருந்து 500000 (5 லட்சம் ரூபா) செலவிடப்பட்டுள்ளது. பேரவையின் உதவித்திட்ட அலுவலர் திரு. பொ. சற்சிவானந்தம் சகல பணிகளையும் முன்னின்று மேற்கொண்டுவருகின்றார்

★ அல்லை இடதுகரை - 03 (எல். பி. - 03) முன்றில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கு தற்காலிக மனைகளை அமைப்பதற்கான முதல் கட்ட நடவடிக்கையாக 240 000/- பெறுமதியான கிடுகுகள் டச்சு உட்கோவில் நிறுவனநிதி உதவியுடன் வழங்கப்பட்டுள்ளது.

★ 1990ம் ஆண்டு வன்செயலுக்கு முன்னர் இருபத்தைந்து பாலர் பாடசாலைகள் திருக்கோணமலை மாவட்டத்தில் எம்மால் நடத்தப்பட்டு வந்தன. பின்னர் சீரற்ற நிலையால் இவை மூடப்பட்டன. மீண்டும் இவ்வாண்டு சித்திரை மாதம் தொடக்கம் மேற்படி பாலர் பாடசாலைகளை நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

★ பேரவையின் விவசாயப் பயிற்சி வகுப்புக்கள், சிக்கன சேமிப்புச் சங்கப் பயிற்சி வகுப்புக்கள், மற்றும் இவற்றோடு இணைந்த பயிற்சி வகுப்புக்கள் மூதூரில் அண்மையில் நடத்தப்பட்டுள்ளது. எல்லாமாக இருபது பயிற்சியாளர்கள் இதில் பங்குபற்றிப் பயனடைந்துள்ளனர்.

★ பேரவையின் கல்வித்திட்ட நடவடிக்கையால் எல்லாமாக 160 மாணவர்கள் பயனடைந்து வருகின்றார்கள் இவர்களுக்குத் தலா 500/- வீதம் மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது. பேரவையின் உதவிக் கணக்காளர் திரு ந. ரவீந்திரன் இதனை நெறிப்படுத்துகின்றார்கள். விபரம் வருமாறு.

ஒக்ஸ்பாம் நிறுவன உதவி 100 மாணவர்கள், அவுஸ்திரேலிய இலங்கை மாணவர் நம்பிக்கை நிதியம் 48 மாணவர்கள், டச் உட்கோயில் நிறுவன உதவி 112 மாணவர்கள்.

★ ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா அவர்களுடன் இணைந்து மூதூரில் வன்செயலால் பாதிக்கப்பட்ட ஐந்து இந்து ஆலயங்களைப் புனரமைக்கப் பேரவையின் தொண்டர்களும், நிருவாகிகளும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

★ பின்வரும் ஆலயங்களுக்கு பேரவையால் பின்வரும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

(1) அருள்மிகு விநாயகர் ஆலயம் 2000/- ஆலங்கேணி, முள்ளுக் கம்பி றோல் 2ம் வழங்கப்பட்டது (2) அருள்மிகு விநாயகர் ஆலயம், 2000/- ஈச்சந்தீவு முள்ளுக் கம்பி றோல் 2ம் வழங்கப்பட்டது. (3) மூதூர் ஆலிம் சேனை முருகன் ஆலயம் 4 றோல் முள்ளுக் கம்பி, (4) சீனன்குடா விநாயகர் ஆலயம் 4 றோல முள்ளுக்கம்பி, (5) பூம்புகார் அம்மன் ஆலயம் 4 றோல் முள்ளுக்கம்பி, (6) பாரதிபுரம் விநாயகர் ஆலயம் மங்கலப் பொருட்கள்.

மொத்த நிதி :- 14,850,00,

நிதி உதவி: பேரவையின் இந்துகலாசார நிதியம்.

★ தம்பலகாமத்தைச் சார்ந்த கே. சுசியந்தி என்னும் மாணவியின் இருதய மாற்று சிகிச்சைக்கான ரூபா பத்தாயிரம் (10 000/-) பேரவையால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

★ அண்மையில் கல்முனையில் 11வது பேராளர் அவையையும் தேசிய இந்து இளைஞர் மாநாட்டையும் நடத்திய இலங்கை இந்து இளைஞர் பேரவைக்கு கடனாக 45000/-மும் நன்கொடையாக 5000/-மும் நாம் வழங்கியுள்ளோம். எமது பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்களே இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைமைச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

★ திருக்கோணமலை இந்து இளைஞர் மன்றத்தால் பரிபாலிக்கப்படும் இந்து மயான பாதுகாவலர் மனைத் திருத்தத்துக்கு பேரவையால் 25000/ வழங்கப்பட்டுள்ளது.

# இந்துசமய செய்திக் கண்ணோட்டம்

★ ஆகம முறைபடிப் பூசைகள் நடைபெறும் ஆலயங்களில் மகோற்சவம் அல்லது அலங்கார உற்சவம் நித்திய கிரியைகளில் ஏற்படும் தவறுகளை நீக்குவதற்காகவே செய்யப்படுகின்றன. இது யாவரும் அறிந்த விடயமாகும். ஆகவே மகோற்சவங்களை அல்லது அலங்கார உற்சவங்களை செய்யும் குருமாரும் அதனை நடாத்துகின்ற உபயகாரரும், கோயிலை பரிபாலனஞ் செய்வோரும் ஒன்றிணைந்து கிரியைகளிலும், பூசைகளிலும் தவறுகள் ஏதும் நிகழாவண்ணம் நடைபெறும்போது தான் உற்சவங்களை செய்யும் குருக்கள்மாரும், உபயகாரரும், கோயில் பரிபாலகரும், அக்கிராம மக்களும் நாடும் நன்மை பெற முடியும். கிரியைகளில் ஏதும் தீங்கு, குறைவு ஏற்படின் தீய பலன்களே நிகழும். இதை உணர்ந்து உற்சவங்களை செய்வோர் அனைவரும் உற்சவங்களிலோ, பூசைகளிலோ, ஏதும் குறைவு இன்றி நடாத்த முன் வருவார்களாக.

★ ஆலயங்களுக்குச் செல்வோர் எவ்வாறு செல்ல வேண்டும் என்பதை யாவரும் அறிவர் அதில் ஆண்கள் மேலங்கி இன்றி, வேட்டி, சால்வையுடன் செல்ல வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இதனையே சைவ மக்கள் காலாகாலமாக பின்பற்றியும் வருகின்றார்கள். ஆனால் இன்றோ சில இடங்களிலுள்ள சைவ ஆலயங்களுக்கு வழிபடச் செல்லும் ஆண்கள் மேலங்கி இன்றி செல்வோர் அரிதாகவே உள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூர் கந்தசுவாமி கோவில் கோபுர வாசலிற்குள் சென்று வழிபாடு செய்யும் ஆண்கள் எவரும் மேலங்கியுடன் செல்ல முடியாது அங்கு ஏராளமான பக்தர்கள் சென்று வழிபடும் காட்சியினை யாவரும் காண்கின்றோம். இந்நிலை மற்றைய எல்லா சைவ ஆலயங்களிலும் பின்பற்றுவதற்கு ஏற்ற ஒழுங்கினை மேற்கொள்வது ஒவ்வொரு கோயில் பரிபாலன சபையினரதும் கட்டாய கடமையாகும்.

★ சைவசமயத் தத்துவங்களையும், கருத்துக்களையும் மாணவர் மத்தியில் பதியவைப்பதற்காக ஒவ்வொரு இடங்களிலும் உள்ள இந்து இளைஞர் மன்றங்கள் மாணவர்களிற்கிடையில் வினாவிடை, கட்டுரை, கவிதை, பேச்சு, நாடகம், நாட்டிடியம் போன்ற போட்டிகளை ஒரு வருடத்தில் ஒரு தடவையாவது நடாத்தி அவர்களுக்கு சிறந்த பரிசில்களை வழங்கி சமய அறிவையும் வளர்ப்பது இந்து இளைஞர் மன்றங்களின் பணிகளில் ஒன்றாகக் கொண்டு செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

★ கோயில்கள் விசேடமாக இறைவன் எழுந்தருளி இருக்கும் இடங்களாகும். இவ்வாறு உருவத்திருமேனிகளில் இறைவன் எழுந்தருளி இருப்பது ஆன்மாக்களாகிய எம் மீது வைத்த அளப்பெரும் கருணையே ஆகும். ஒரு நாட்டின் தலைவர் குறித்த வைபவம் ஒன்றில் பங்கு பற்ற வரும் போது அவருக்கு நாம் எவ்வளவு மரியாதையும், கௌரவமும் அளிக்கின்றோம். அவ்வாறாயின் எம்மையே படைத்து, காத்து அருள் பாலிக்கும் இறைவனுக்கு எவ்வளவு அன்பாகவும் பணிவாகவும் இருக்க வேண்டும். இப்பேற்பட்ட இறைவனே ஆலயங்களில் விஷேடமாக எழுந்தருளி இருக்கின்றார். எனவே நாம் கோயில்களில் புனிதத்தைப் பேணுவது தலையாய கடமையாகும். எனவே நாம் அனைவரும் ஒவ்வொரு கோயிலினதும் புனித தன்மையைப் பேணி உய்தி பெறுவோமாக.

## வாழ்த்துகின்றோம்!

எமது பேரவையின் புனர்வாழ்வுப் பொறுப்பாளரும் சிவநெறி சஞ்சிகைக் குழுவின் உறுப்பினருமான ஆசிரியர் திரு. ப. புவனேஸ்வரன் அவர்கள் அண்மையில் ஆசிரியை செல்வி இ. இராதை அவர்களைத் திருமணம் செய்துகொண்டார்கள். மணமக்கள் மலரும் மணமும் போல நீடூழி வாழ வாழ்த்கின்றோம்.

— சஞ்சிகைக் குழுவினர்.

கோபப்படும் ஒரு மனிதனால் அதிகளவு சிறப்பான வேலைகள் செய்ய முடியாமல் போய்விடுகிறது. அதே வேளையில் எதற்கும் கோபப் படாத மனிதனால் சிறப்பான பணிகளைச் செய்ய முடிகிறது. கோபத்திற்கோ வெறுப்பிற்கோ வேறு ஏதாவது ஆசைகளுக்கோ இடம் கொடுப்பவனால் செயல் புரிய முடியாது, அவன் தன்னைத் தான் சிதைத்துக் கொள்கின்றானே தவிர உண்மையாகஎதையும் செய்து முடிப்பதில்லை அமைதியான, மன்னிக்கக் கூடிய, சம நோக்குடைய, நிலை குலையாத மனமுடையவனே மிக அதிக அளவு செயல்புரிய முடிகிறது.

- சுவாமி விவேகானந்தர்.

## மாணவர் உலகு

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் செய்த அற்புதங்கள்

| இல. | அற்புதம் | தலம் | பாடிய தேவாரம் |
|---|---|---|---|
| 01. | ஞானப்பால் உண்டது | சீர்காழி | ''தோடுடையசெவியன்'' |
| 02. | பொற்றாளம் பெற்றது | திருக்கோலக்கா | ''மடையில் வாளை'' |
| 03. | முத்துச்சிவிகை, முத்துப்பல்லக்கு, முத்துக்குடை முத்துச்சின்னம் பெற்றது. | மாறன்பாடி | ''எந்தைஈசன் எம் பெருமான்'' |
| 04. | யாழ்முரி | திருத்தருமபுரம் | ''மாதர்மடப்பிடியும்'' |
| 05. | முயலகண்நோய் நீக்கியது. | திருப்பாச்சிலாச் சிரமம் | ''துணிவளர் திங்கள்'' |
| 06. | குளிர்ச்சுரம் நீக்கியது | கொடிமாடச் செங்குன்றூர் | ''அவ்வினைக் கிவ்வினை'' |
| 07. | பொன்முடிச்சு பெற்றபோது | | ''இடரினும் தளரினும்'' |
| 08. | அரவுதீண்டிய வணிகனை உயிர்ப்பித்தது | திருமருகல் | ''சடையாயெனுமால்'' |
| 09. | வாசி இல்லா காசு பெற்றது | திருவீழிமிழலை | ''வாசிதீரவே காசு நல்குவீர்'' |
| 10. | திருமறைக்காடு கதவை மூடச் செய்தது | திருமறைக்காடு | ''சதுரம் மறை'' |
| 11. | பாண்டிய மன்னனின் வெப்பு நோய் நீங்கியது | பாண்டிநாடு | ''செய்யனே திருவாலாய்'' |
| 12. | அனல்வாதம் | பாண்டிநாடு | ''தளிர் இளவளரொளி'' |
| 13. | புனல்வாதம் | பாண்டிநாடு | ''வாழ்க அந்தணர்'' |
| 14. | பூம்பாவையை உயிர்ப்பித்தது | திருமயிலாப்பூர் | ''மட்டிட்டபுன்னை'' |
| 15. | திருஞானசம்பந்தர் திருமணம் | சீர்காழி | ''கல்லூர்ப் பெருமணம்'' |
| 16. | சோதியுட் கலந்தது | சீர்காழி | ''காதலாகி'' |

# எங்கள் ஞானியர்

| பெயர் | கடையிற் சுவாமி | செல்லப்பா சுவாமி | யோகர் சுவாமி. |
|---|---|---|---|
| ஊர் | இந்தியா, கன்னடதேசம் | யாழ்ப்பாணம் | மாவிட்டபுரம். |
| குரு | ஸ்ரீ நரசிம்மபாரதி | கடையிற் சுவாமி | செல்லப்பா சுவாமி. |
| தொழில் | நீதிபதி | — | கிளிநொச்சி நீர்ப்பாசன இலாகாபொருட்காப்பாளர் |
| பிறபெயர் | தீட்சநாம பெயர்.- சுவாமி முத்தியானந்தர் | — | இளமைப் பெயர்:- சதாசிவன்- |
| வாழ்ந்த இடம் | யாழ்ப்பாணம் பெரியகடை சதுக்கம் | நல்லூர் தேரடி | நல்லூர். |
| மகாவாக்கியம் | | * எல்லாம் செப்படி வித்தை<br>* அப்படியே யுள்ளது.<br>* ஒரு பொல்லாப்பும் இல்லை,<br>* முழுவதும் உண்மை,<br>* ஒருவருக்கும் தெரியாது<br>* ஆர் அறிவார்<br>* எப்பொழுதோ முடிந்த காரியம்<br>* நாம் அறியோம். | * தருமநெறியிற்பிசகாதே<br>* எவ்வுயிரும் எம்பெருமான்<br>* திருமுன்னிலை என்று சாதனை செய்<br>* கடவுள் உள்ளும், புறமும் உள்ளவர்.<br>* நான் உனக்குத் தரக் கூடிய முதுசொம் எந் நேரமும் கடவுள் உன்னுடன் இருக்கிறார். என்னும் உறுதிமொழி. |
| சமாதியடைந்த இடம். | வண்ணார்பண்ணை நீராவியடி | நல்லூர் | கொழும்புத்துறை |
| சமாதி அடைந்த ஆண்டு. | 1882 - புரட்டாதி மாதம். | 1915 - பங்குனி மாதம். | 1994 - பங்குனி மாதம். |

## 01. அட்டமாசித்திகள் எவை?

01. அணிமா — அணுவளவாகச் சுருங்கும் ஆற்றல்.
02. லகிமா — கனமற்றதாகும் ஆற்றல்.
03 மகிமா — விரும்பியவாறு உருவத்தை பெருக்கச் செய்யும் ஆற்றல்.
04. பிராத்தி — வேண்டியவற்றை அடையும் ஆற்றல்.
05. கரிமா — மிகக் கனமாயிருக்கும் ஆற்றல்.
06. பிரகாமியம் — நினைத்ததை முடிக்கும் ஆற்றல்.
07 ஈசத்துவம் — படைத்தல் போன்ற மேலான செயல்புரியும் ஆற்றல்.
08. வசித்துவம் — யாவரையும், யாவற்றையும் வசப்படுத்தும் ஆற்றல்.

## 02. அட்டாங்க யோகம் எவை?

01. இயமம். 02. நியமம். 03 ஆசனம் 04. பிராணாயமம். 05. பிரத்தியாகாரம்.
06. தாரணை. 07. தியானம். 08. சமாதி.

## 03. ஆறு ஆதாரங்களும் எவை?

01. மூலாதாரம். 02. சுவாதிஸ்டானம். 03. மணிபூரகம். 04. அநாகதம். 05. ஆக்ஞை
06. விசுத்தி.

# இந்து சமய வினா விடைப் புதிர் - 10

## சரியான விடைகள்

01. ஆன்மாக்களுக்குத் தனு, கரண, புவன போகங்களை முதற் காரணத்தினின்றுந் தோற்றுவித்தல்

02. சிவாலயத்துக்குஞ், சிவனடியார்களுக்குந் தொண்டு செய்தல்.

03. திருவதிகை மனவாசகங் கடந்தார்.

04. நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லி வலக்கையின் நடுவிரல்கள் மூன்றினாலும் நெற்றியில் தரித்தல் வேண்டும்.

05. செந்தாமரை, வெண்தாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், செவ்வாம்பல், வெள்ளாம்பல் என்பவைகளாம்.

06. நந்தியாவர்த்தம் பூ.

07. விதிப்படி கூட்டி அமைக்கப்பட்ட பால், தயிர், நெய், கோசலம், கோமயம், என்பவைகளினது தொகுதியாம்.

08 ஐப்பசி சுவாதி.

09. சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமாமகேஸ்வர விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கலியாணசுந்தர விரதம், சூல விரதம், இடப விரதம், பிரதோஷ விரதம் என்பனவாம்.

10. தொடர்புடையார் மாட்டு ஏற்படும் உள்ள நெகிழ்ச்சி.

## பரிசு பெற்றோர் விபரம்

முதலாம் பரிசு:

செல்வி செ. புஸ்பாதேவி,
தி/ஸ்ரீ சண்முகவித்தியாலயம்

இரண்டாம் பரிசு:

செல்வி து. சிவாஜினி,
தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம்.

மூன்றாம் பரிசு:

செல்வி வே. சுரேஸ்குமார்,
தி/இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக்கல்லூரி.

ஆறுதல் பரிசு:

1. செல்வன் கோ. மதியழகன்
தி/தம்பலகமம் மகா வித்தியாலயம்.

2. செல்வன் வே. சுரேஸ்குமார்,
தி/இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

3 செல்வன் கா. வடிவேல்,
மத்திய வீதி, பட்டித்திடல், தோப்பூர்.

4. செல்வன் சி. சாந்தகுமார்,
தி/இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

5. செல்வி பு. வனிதா,
தி/தம்பலகமம் மகா வித்தியாலயம்.

---

மனித இனத்திற்கு மதம் பயன்பட வேண்டும்: மனிதன் அடிமையாகவோ சுதந்திரனாகவோ, இழிந்தவனாகவோ தூய்மையில் உயர்ந்தவனாகவோ, எங்கிருந்தாலும் சமயம் மனிதனுக்குக் கைகொடுக்க வேண்டும். வேதாந்தக் கொள்கைகள் அல்லது சமயத்தின் குறிக்கோள் என்று என்ன பெயரில் கூறினாலும் மனிதன் எந்த நிலையில் எங்கிருந்தாலும் அவனை உயர்த்த அவனுக்கு உதவுவதில்தான் அதன் நிறைவு இருக்கிறது.

# இந்து சமய வினா விடைப் புதிர் - 11

இந்து சமய தத்துவங்களையும் அதன் உண்மைகளையும் அறியும் பொருட்டு இதன்கீழ் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் இப்பத்திரத்தில் விடை எழுதி அனுப்பி வையுங்கள்.

1. பதி என்பதன் பொருள் என்ன?
2. கடையிற் சுவாமிகளின் குரு யார்?
3. எவ்வாலய கருவறையில் சக்கரம் வைத்து வழிபடுகிறார்கள்?
4. சுவாமி விவேகானந்தர் எத்தனையாம் ஆண்டு பிறந்தார்?
5. கந்தபுராணத்தில் எத்தனை காண்டம் உள்ளது? அவை எவை?
6. மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை தினம் எது?
7. முருகப் பெருமானின் வாகனம் எது?
8. யோகமார்க்கத்தில் அடையும் முத்தி என்ன?
9. தற்போதைய தமிழ் வருடத்தின் பெயர் என்ன?
10. சுவாமி விவேகானந்தரின் இளமைப் பெயர் என்ன?

குறிப்பு:- இப்பத்திரத்தில் அல்லது இதனை இணைத்து விடை எழுதினால் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

பெயர்:

முகவரி:

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்,
''சிவநெறி''
தி.மா.இ.இ. பேரவை,
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை,

முடிவுத் திகதி: 30-6-94

15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சிவநெறி சிறுவர் வட்டத்தில் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர ஆர்வமுள்ளோர் சிவநெறியில் வெளியாகும் இரு கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.


உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் தரமான ஆக்கங்கள் சிவநெறியில் அவ்வப்போது வெளியாகும்.

ஆக்கங்களை மாணவர் தாமாகவே எழுதினார் என்பதை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

உறுப்பினர் உறுப்புரிமை அட்டை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
''சிவநெறி''
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.




## சந்தா விபரம்

''சிவநெறி'' முத்திங்கள் ஏடு

ஆண்டுச் சந்தா — 50/- ரூபா (அஞ்சல் செலவுடன்)
தனிப் பிரதி — 10/- ரூபா
ஆயுள் சந்தா — 1000/- ரூபா

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஆசிரியர்
சிவநெறி
தி. மா. இ. இ. பேரவை
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

பிறருக்காக நீங்கள் உணர்ச்சி கொள்கிறீர்களா ? உணர்ந்தீர்களானால் ஒருமைப்பாட்டில் வளர்கிறீர்கள். பிறருக்காக உணரும் தன்மை இல்லாவிடில், நீங்கள் எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும் ஒரு பயனுமில்லை. நீங்கள் வெறும் வறட்டு அறிவாளிகள், அவ்வளவுதான், ஆனால் நூல்களைப் படிக்கத் தெரியாவிட்டாலும் மொழிகள் தெரியாவிட்டாலும் உங்கள் உள்ளத்தில் உணர்ச்சி இருக்குமானால் நீங்கள் நேரான வழியில்தான் போகிறீர்கள். இறைவன் உங்களிடமே.

— சுவாமி விவேகானந்தர்

''சிவநெறி'' வளர வாழ்த்துகின்றோம்

திருக்கோணமலையில் இரும்பு வீட்டுத் தளபாடங்களுக்கு
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:

# சிந்து தளபாட மாளிகை

226, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை

அலுமினிய வேலைகளும் செய்து கொடுக்கப்படும்

# SINTHU FURNITURE PALACE

MANUFACTURES OF
FURNITURES, BEDS. ALMERAH CHAIRS, TABLES
T.V. STANDS & KITCHEN RACKS

226, THIRUGNANASAMPANTHAR STREET,
TRINCOMALEE

# வேதம் கூறும் கதைகள்

— ராஜேஸ்வரக் குருக்கள் —

இன்றைய இளம் சமுதாயம் கேட்பது கடவுள் இருக்கிறாரா? எப்படி இருக்கிறார்? என்பதற்கு தந்தை தன் மகன் சுவேதகேதுவுக்கு கூறிய கதை ஒன்றையும் பார்ப்போம்.

ஒருமுறை ''சுவேதகேது'' என்ற சிறுவன் தன் தகப்பனிடம் ''தந்தையே உலகம் அனைத்தும் ஒரு சக்தியினின்றும் வந்ததாகச் சொல்கிறீர்கள். இவ் உலகு எத்தனை அற்புதங்கள் நிறைந்துள்ளது. எத்தனை உருவங்கள்; எத்தனை ஜீவராசிகள்; எத்தனை வேற்றுமைகள்; எத்தனை பலதிறப்பட்ட காட்சிகள்! இவையெல்லாம் பெயரும் வடிவும் அற்ற ஒரு பொருளிலிருந்து எங்ஙனம் உண்டாக முடியும்? என்று கேட்டான், ''சுவேதகேது'' அதற்கு மகனே, அதோ அந்த ஆலமரத்தடியில் இருக்கும் ஓர் பழத்தை எடுத்து வா எனறார் தந்தை உத்தாலகர்.

சுவேதகேது ஆலம்பழம் ஒன்றைத் தேடியெடுத்து வந்தான். ''பழம் கொண்டு வந்து விட்டேன் ஐயா'' என்றான்.

''மகனே அதை கிள்ளிப்பார்'' என்றார். ''தந்தையே கிள்ளிப் பார்த்தேன் ஐயா'' உள்ளே என்ன இருக்கிறது. ''சின்னஞ் சிறு விதைகள் இருக்கின்றன என்றான் மகன் சரி அவற்றில் ஒரு விதையை எடுத்து அதனைக் கிள்ளிப் பார்'' என்றார் தந்தை. சுவேதகேது ஓர் ஆலம் விதை எடுத்துக் கிள்ளிப் பார்த்தான். ''என்ன தெரிகிறது?'' என்றார் தந்தை உத்தரலகர். ''கண்ணுக்கு ஒன்றும் தெரியவில்லை'' என்றான் மகன். அப்பொழுது தந்தை உத்தலாகர் சொன்னார், ''மகனே, அதோ வெளியிற் கம்பீரமாக நிற்கும் ஆலமரத்தைப் பார்த்தாயா? அதன் கிளையும் கொப்பும் விழுத்தும் சேர்ந்தும் பிரமாண்டமான தோற்றத்தை அளிக்கின்றது. அது எங்கிருந்து வந்தது என்று நினைக்கிறாய்? உன் கண்ணுக்குப் புலப்படாமல் அந்த ஒரு விதைக்குள்ளிருக்கும் நுண்ணிய பொருளே பின்பு மரமாகக் காட்சியளிக்கிறது. இதை நன்றாக யோசித்துப் பார். இது போன்றே உலகம் முழுவதும் கண்ணுக்குப் புலப்படாத பரம் பொருளிலிருந்து உண்டாயிற்று'' என்றார், சரி, அப்படியானால் எப்படி அப்பரம்பொருள் மறைந்து போயிற்று'' என்று சுவேத கேது கேட்டான். உத்தலாகர் அதற்கு மறுமொழி ஒன்றுங் கூறாமல் மகனே ஓடிப்போய் வீட்டில் ஒரு உப்புக்கட்டி எடுத்து வா' மகன் கொண்டு வந்தான் ''அதை நீர் இறைத்த பாத்திரம் ஒன்றிலே போடு'' மகன் அவர் சொன்ன படியே செய்தான். அதன்பின் ''நீ நாளைக் காலை வா'' என்றார்,

மறுநாட் காலை சுவேதகேது வந்து தந்தையின் முன் நின்றான். ''நீ நீரில் போட்ட உப்புக்கட்டியை எடுத்துக் கொண்டுவா' என்றார் தந்தை உத்தலாகர் மகன் சென்று பார்த்தான் உப்புக்கட்டி அப்படியே இருக்குமா? அது கரைந்து போயிருந்தது ''ஐயா, உப்பு அழிந்து போய்விட்டது என்றான் சுவேதகேது.

''அந்த பாத்திரத்து நீரில் மேலாற் சிறிது அருந்து'' என்றார் தந்தை.

''உப்பாக இருக்கிறது'' என்றார் மகன்.

''மத்தியிலிருந்து சிறிது நீர் எடுத்து அருந்திப் பார்,' என்றார், தந்தை.

''அதுவும் உப்பாக இருக்கிறது'' என்றான் மகன்.

''அடித்தணீரை அருந்திப்பார்'' என்றார்


## சஞ்சிகைக் குழு

★ திரு. கு. கோணாமலை ஆசிரியர்
★ திரு. க. சவுந்தரராசா துணைஆசிரியர்
★ திரு. வ. தங்கராசா
★ திரு. செ. சிவபாதசுந்தரம்
★ திரு. சு. கனகசபாபதி
★ திரு. நா. காளிராசா
★ திரு. கெ. தர்மகுலராசா
★ திரு. செ. ஜெயச்சந்திரன்
★ திரு. பூ. புவனேஸ்வரன் வி. பொறுப்பாளர்

தந்தை அதுவும் உப்புக் கரிக்கின்றது. ஐயா'' என்றான் ''சுவேதகேது, அப்பனே உப்பு அழிந்து விட்டதா? ஓர் உருவத்தில் அது (எங்கேயோ) இருக்கின்றது, என்றான் மகன்.

''மகனே இங்ஙனம் உலகம் முழுவதிலும் பரம் பொருள் மறைந்து நிற்கின்றது, கண்ணுக்குப் புலப் படாமல் அனைத்திலும் இருக்கின்றது. அதுவே ''சத்து'' என்றார் உத்தலாகர்.

''மக்களே இறைவன் இப்படித்தான் இருக்கின்றார்''

ஆதாரம்,

சாந்தோக்கிய உபநிடதம்.

● அன்பு இணைப்பது, ஒருமைப்பாட்டை உண்டாக்குவது, தாய் குழந்தையுடனும், குடும்பங்கள் நகரத்துடனும் ஒன்றாவது போல நீங்கள் ஒன்றாகி விடுகிறீர்கள்; உலகம் முழுவதும் விலங்கினத்துடன் ஒன்றாகிறது. அன்பு என்றும் நிலையானது; அன்பே கடவுள். இருப்பவை அனைத்தும் அந்த அன்பு வடிவமான கடவுளின் தோற்றங்களே. அன்பின் வெளிப்பாட்டில் மட்டுந்தான் ஏற்றத் தாழ்வு உள்ளது. இந்த வேறுபாடுகள் எல்லாம் அளவில் மட்டுமே. அனைத்தும் ஒரே அன்பின் தோற்றங்களே. எனவே நமது செயல்கள் எல்லாம் ஒற்றுமையை வளர்க்கின்றதா. வேற்றுமையைத் தோற்றுவிக்கின் றதா, என்பதைத் தீர்மானிக்க வேண்டும். வேற்றுமையை ஏற்படுத்துமானால் அந்தச் செயலை விட்டுவிட வேண்டும். ஒற்றுமையை ஏற்படுத்துமானால் அவை நற்செயல்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். எண்ணங்களிலும் அது போலவே, அவை ஒற்று மையை அழித்து பலவற்றைப் பெருக்காமல் ஒருமைப்படுத்தி ஒவ்வோர் ஆன்மாவையும் இணைக்கின்றனவா? இதைச் செய்தால் நாம் அதை ஏற்றுக் கொள்வோம். அப்படியில் லாவிட்டால் குற்றம்புரிபவை என்று ஒதுக்கி விடுவோம்.

● இந்த உலகத்தில் காணும் அறிவெல்லாம் எங்கிருந்து வந்தது? அவை நம்மிடமே இருந்தது. எந்த அறிவு நமக்கு வெளியே இருக்கிறது? ஒன்றுமே இல்லை. அறிவு என் பது ஒருபோதும் சடப் பொருளில் இல்லை. மனிதனிடமே எப்போம் இருந்து வந்தது. ஒருவரும் அறிவைப் படைப்பதில்லை. மனிதன் அதைத் தன்னுள்ளிருந்து வெளி கொணர்கிறான். அது அங்கேயே உள்ளது. கடுகில் எட்டில் ஒரு பங்கே உள்ள ஆலம் விதையில், ஏக்கர் கணக்கான பரப்பில் பரந்து நிற்கும் ஆலமரமே அடங்கியுள் ளது; எல்லா சக்தியும் அதனுள்ளே உள்ளது. மிகப் பெரிய அறிவாற்றல் உயிரணுவுள் அடங்கி இருக்கிறது. என்று நாம் ஏற்றுக் கொள்ளும்போது: எல்லையற்ற சக்தியும் நம் முள் அடங்கி இருக்கக் கூடாதா?

— சுவாமி விவேகானந்தர்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

திருக்கோணமலை மாவட்டத்தின் பல பாகங்களிலும் சமயப்பணியும்
சமூகப்பணியும், அகதிகளுக்கான பணிகளையும் ஆற்றுகின்ற
முதன்மையான இளைஞர்களின் அமைப்பே
திருக்கோணமலை மாவட்ட
இந்து இளைஞர் பேரவை ஆகும்.

**இதன் வளர்ச்சிக்குத் தாராளமாக**
**உதவுங்கள்**

''சிவநெறி'' வளர வாழ்த்துகின்றோம்

தரமான தங்க நகைகளுக்கு

# அம்பிகா ஜுவலரி

182, என். சீ. றோட்

திருக்கோணமலை

தொலைபேசி இலக்கம்: 026-22014

கிளை :

# எஸ். கே. எஸ். ஜுவலர்ஸ்

10, 3ம் குறுக்குத் தெரு,

திருக்கோணமலை

தொலைபேசி இலக்கம்: 026-22219

ஒஸ்கா என்ரபிறைசர்ஸ் 98-பிரட்ணம் வீதி, கொழும்பு - 13.